வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

சஞ்சீவி

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 92

ஞாயிற்றுக்கிழமை 26 பெப்ரவரி 2023 | மாசி 14 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 16+8

# தேர்தலுக்கு நிதியை விடுவிக்க நாடாளுமன்றத்திடம் கோரிக்கை

## ஜனாதிபதியின் உரையை அடுத்து ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு, பெப்ரவரி 26

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்துவதற்கான நிதியை விடுவிக்குமாறு நாடாளுமன்றத்திடம் – சபாநாயகரிடம் – தேர்தல்கள் ஆணைக்குழு எழுத்து மூலம் கோரியுள்ளது. இது தொடர்பான கடிதம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில், கடிதம் கிடைக்கப்பெற்றதை சபாநாயகரும் உறுதிப்படுத்தியுள்ளார். »15




வேட்புமனுத் தாக்கல் செய்த அரச ஊழியர்கள்

## தேர்தல் நடைபெறும் வரையில் சேவையில் இணையமுடியாது!

### தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 26
உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பள மற்ற விடுமுறையில் உள்ள அரச பணியாளர்கள் தேர்தல் இடம்பெறும் வரை சேவையில் ஈடுபட »15

## ஊடக அறிக்கையின் மூலம் தேர்தலை ஒத்திவைக்கமுடியாது

### தேர்தல்கள் ஆணைக்குழு பொறுப்பற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 26
உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடைபெறாது என்று ஊடக அறிவிப்பு ஊடாக மாத்திரம் அதனை ஒத்திவைக்கமுடியாது என்று சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தேர்தல்கள் ஆணைக்குழுவின் இந்த »15

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஒத்திவைப்பு

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யமுடியும்!!!

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 26
உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவோம் என்று நீதிமன்றில் தேர்தல்கள் ஆணைக்குழு வாக்குறுதி வழங்கியுள்ளது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு »15

## வீதியில் நெல் உலரவிடுவதால் ஒரே மாதத்தில் மற்றொரு சாவு!

கிளிநொச்சி, பெப். 26
பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் கண்டாவளை சந்திக்கருகில் நேற்று பிற்பகல் பாரவூர்தி - துவிச்சக்கர வண்டி விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.
வட்டக்கச்சியைச் சேர்ந்த கதிரவேலு யாதவராசா (வயது-58) என்பவரே உயிரிழந்துள்ளார். »15

ஊர்காவற்றுறையில்

## தீயில் எரிந்த நிலையில் 2 பெண்களின் சடலங்கள்

யாழ்ப்பாணம், பெப். 26
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து தீயில் கருகிய நிலையில் இரண்டு பெண்களின் சடலங் »02

ஊர்காவற்றுறையில்

## குளத்திலிருந்து சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், பெப். 26
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள குளத்திலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
அவர் துவிச்சக்கர வண்டியுடன் »15

## தனக்குச் சிலை வைக்குமாறு கனவில் சொன்னாராம் புத்தர்!

யாழ்ப்பாணம், பெப். 26
கனவில் புத்தபெருமான் தோன்றி தனக்குச் சிலை வைத்து வணங்குமாறு கூறினார். அதனால்தான் சிலையை வைத்தோம் என்று நிலாவரை கிணற்றுக்கு அருகில் கடமையில் »16



மக்கள் எதிர்ப்பையடுத்து

## குடியேறிய புத்தர் இடம்பெயர்ந்தார்

யாழ்ப்பாணம், பெப். 26
நிலாவரையில் இராணுவத்தினரால் இரவோடு இரவாக அமைக்கப்பட்ட புத்தர் சிலை பொதுமக்கள் மற்றும் »02




## வடக்கு மாகாணசபைக்கு விரைவில் தென்பகுதி சிங்கள சிற்றூழியர்கள்

யாழ்ப்பாணம், பெப். 26
வடக்கு மாகாணசபைக்கு உட்பட்ட சிற்றூழியர்கள் வெற்றிடங்களுக்கு தென்பகுதியிலிருந்து சிங்களவர்களை நியமிப்பதற்கான நகர்வுகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. இது தொடர்பில் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்கள் இடம்பெற்றுள்ள நிலையில் விரைவில் கோரிக்கை கடிதம் வடக்கு மாகாணத்திலிருந்து அனுப்பப்படவுள்ளது. »15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீயில்...

களாக மீட்கப்பட்டுள்ளனர். மனுவேற்பிள்ளை அசலின் பௌலினா, யேசுதாசன் விக்ரோரியா ஆகிய வயோதிபப் பெண்களே சடலங்களாக நேற்று மீட்கப்பட்டுள்ளனர்.

கருத்தோவியரான காலஞ்சென்ற பயஸின் தாய் மற்றும் சிறிய தாயார் ஆகியோரே இவ்வாறு எரியுண்ட நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் என்று தெரியவருகிறது. இவர்கள் இருவரும் தனிமையில் வசித்து வந்துள்ளனர். அவர்களுக்கு வழமையாக உணவு வழங்கச் சென்றவர்களே, குறித்த இருவரும் தீயில் எரிந்திருப்பதைக் கண்ணுற்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். உயிரிழப்பு தொடர்பாக விசாரணை நடத்தும் பொலிஸார் கொலையா? தற்கொலையா? தீ விபத்து ஏதும் ஏற்பட்டதா என்கிற கோணத்தில் ஆராய்ந்து வருகின்றனர். உடற்கூற்றுப் பரிசோதனைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ஔ,20,26)

## குடியேறிய...

அரசியல்வாதிகளின் தலையீட்டையடுத்து அகற்றப்பட்டது.

நிலாவரை கிணற்றுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக புத்தர் சிலையும் பலகையிலான அமைக்கப்பட்ட சிறுஅறை வடிவிலான கட்டுமானமும் கொங்கிறீட் இடப்பட்டு நடுகை செய்யப்பட்டிருந்தது.

இதனை கண்ணுற்ற மக்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தவிசாளருக்கு தகவல் அளித்துள்ளனர். இதனையடுத்து அவ்விடத்திற்கு தவிசாளர் மற்றும் உப தவிசாளர் உள்ளிட்டவர்கள் சென்றுள்ளனர்.

இதன்போது, சிப்பாய் ஒருவர் பலகையினால் அரச மரத்தின் கீழ் நடப்பட்டிருந்த வழிபாட்டு இடத்தில் இருந்து புத்தரை எடுத்துச்சென்றுவிட்டார். தொடர்ந்து தவிசாளர் உடனடியாக அவ் வழிபாட்டு இடத்தை அகற்றுமாறும் நீதிமன்றத்தில் ஏற்கனவே இது தொடர்பான வழக்குகள் உள்ள நிலையில் யார் இவ்வாறு செயற்பட்டது என்று கேட்க, அவ்விடத்தில் சீருடையில் நின்றிருந்த சிப்பாய்கள் தொலைபேசியில் எவருடனோ உரையாடிவிட்டு குறித்த பலகையிலான கட்டுமானத்தை அடியோடு அகற்றி அருகில் இருந்த இராணுவ முகாமுக்கு எடுத்துச் சென்றனர்.

இந் நிலையில், அச்சுவேலி பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து தவிசாளரிடம் பிரச்சினை தொடர்பாகக் கேட்டறிந்தனர். பொலிஸாரின் வருகையுடன் அயல் இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியும் வருகை தர, தவிசாளர் தமிழ் மக்களின் பிரதேசத்தில் அவர்களது பிரதேசத்தை இராணுவ அனுசரணையில் பௌத்த மயமாக்க மேற்கொள்ளப்படுவதை கண்டித்ததுடன் , இனி இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது எனவும் விசனத்தைத் தெரிவித்தார். அப்போது, இராணுவப் பொறுப்பதிகாரி இங்கு காவல் கடமையில் இருந்த சிப்பாய் ஒருவரே இவ்வாறு நடந்து கொண்டுள்ளாரெனத் தெரிவித்தார்.

மேலும் சம்பவ இடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்களும் நேரில் வந்து நிலைமைகளை ஆராய்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே இவ் வளாகத்தில் இராணுவத்தினரும் தொல்லியல் திணைக்களமும் இரண்டு தடவைகள் சந்தேகத்துக்கு இடமான முறையில் நிலத்தில் அத்திபாரம் போன்று வெட்டிய நிலையில் அதனைத் தடுத்தமைக்காக வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராக அரச கருமத்துக்கு தடை ஏற்படுத்தியதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவ்வழக்கில் சட்ட மா அதிபரின் ஆலோசனை பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஔ,20,26)




# பொன் அணிகளின் போர் சென்.பற்றிக்ஸ் சம்பியன்!

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன் அணிகளின் போர் துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம், நேற்று என்று இரண்டு தினங்கள், இரு அணிகளுக்கும் இடையிலான 106ஆவது போட்டியாக இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 9 இலக்குகளை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக அபிலாஷ் 55 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நர்த்தனன், பிருந்தன், ஜெனகன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 70 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மதுசன் 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சௌத்யன், சாருசன் இருவரும் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

**இரண்டாவது இன்னிங்ஸ்**

இதையடுத்து இரண்டாவது இன்னிங்ஸுக்காக யாழ்ப்பாணக் கல்லூரி அணியை தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடுமாறு சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி பணித்தது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 202 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 179 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. இதனால், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இன்னிங்ஸாலும் 23 ஓட்டங்களாலும் அபார வெற்றிபெற்றது. இரண்டாவது இன்னிங்ஸில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக மதுசன் 59 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டநாயகனாக அபிலாஷ் தெரிவு செய்யப்பட்டார். (அ-ம,125)

## தொழிற்சங்கங்கள் - ஜனாதிபதி பேச்சு இணக்கப்பாடின்றி நிறைவு

கொழும்பு, பெப். 26

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிக்கொள்கை தொடர்பில் தொழிற்சங்கங்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சு இணக்கப்பாடின்றி நிறைவடைந்துள்ளது.

தமக்கான வரிச் சலுகைகளை வழங்கக் கோரி எதிர்வரும் தினங்களில் முன்னெடுக்கப்படவுள்ள மிகவும் தீர்க்கமான வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் நாளை திங்கட்கிழமை இறுதித்தீர்மானத்தை எடுக்கவுள்ளதாகத் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் செயலர் சமன் ஏக்கநாயக்க, திறைசேரி செயலர், ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் உள்ளிட்டோரும், தொழிற்சங்க தொழில் வல்லுநர்கள் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 40 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர். (அ-ஔ,இ)

## பல்கலை மாணவர் 4 பேருக்குத் தடை

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத்தடை உட்பட பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம், 23ஆம் திகதிகளில் இடம்பெற்ற கலைவார நிகழ்வுகளின்போது, மூன்றாம்வருட மாணவர்களால், இரண்டாம்வருட மாணவர்கள்தாக்கப்பட்டமைதொடர்பில்சுதந்திரமான முறைசார்ந்த விசாரணையை மேற்கொள்வதற்கு ஏதுவாக நான்கு பேருக்கும் உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு கலைப் பீடாதிபதிபேராசிரியர்சி.ரகுராம்அறிவித்துள்ளார். கலைவார நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, மூன்றாம் வருட மாணவர்களுக்கும், இரண்டாம் வருட மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் முற்றி, கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் கைகலப்பாக மாறியுள்ளது. இந்தச் சம்பவத்தின் போது தலை மற்றும் தோள்பட்டைப்பகுதியில்உபாதைக்குள்ளான இரண்டாம் வருட மாணவன் ஒருவர் யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில், பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் நான்கு மாணவர்களுக்கும் சம்பந்த மிருப்பதாகக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், பல்கலைக்கழக மாணவர் வதிவிடம், ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் விதிமுறைகளுக்கு அமைவாகக் கலைப் பீடாதிபதியால்இந்தத்தடைவிதிக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கதாகும். (ஔ-இ)

## போதைக்கு அடிமையான திருட்டுச் சந்தேகநபர்கள்

யாழ்ப்பாணம், பெப். 26

கட்டப்பிராயில் ஓய்வுபெற்ற ஆசிரியரின் வீட்டில் களவாடிய 16 பவுண் நகைகளுடன் சந்தேகநபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி வீட்டில் யாருமில்லாத நேரம் வீடுடைத்து 16 பவுண் [illegible] முறைப்பாடு [illegible] தது. யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் நாயன்மார்கட்டைச் சேர்ந்த 24 வயதான இரண்டு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து நகைகளை மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் உயிர்கொல்லி போதைப் பாவனைக்கு அடிமை [illegible] தெரிவிக்கப் [illegible] (அ-ஔ,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலையேற்றத்தால் செயலிழந்த ஏற்று நீர்ப்பாசனம்

கிளிநொச்சி, பெப். 26

எரிபொருள் விலையேற்றத்தால் கிளிநொச்சிஅக்கராயன் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் தற்போது செயலிழந்து காணப்படுகின்றது என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் கே.கருணாநிதி தெரிவித்தார்.

அக்கராயன் குளத்துக்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எரிபொருள் விலை ஏற்றத்துக்கு முன்னர் 50 ஏக்கருக்கு உட்பட்ட நிலப்பரப்புக்கு ஏற்று நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது எரிபொருள் நெருக்கடி காரணமாக ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் செயலிழந்துள்ளது. வெளிநாட்டில் உள்ள எமது உறவுகளின் உதவியுடன் குறித்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை சூரிய மின்கல சக்தியுடன் எதிர்காலத்தில் இயக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். சூரிய மின்கல சக்தியும் எரிபொருள் சக்தியும் பயன்படுத்தி ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் செயற்படுத்தப்பட்டால் 150 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியும். இதேவேளை அக்கராயன் குளத்தின் அணைக்கட்டு, வான்பகுதி, வாய்க்கால்கள் ஆகியவற்றின் பணிகளை முன்னெடுப்பதற்கு நிதி கிடைக்கவில்லை. நிதி கிடைத்தால் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்படும் - என்றார். (ம-14,13)




## 2 & 3 bedrooms apartment for sale in wellawatte

GALLE ROADக்கு மிக அருகாமையில்



20 months payment plan available

COMPLETION 2024

தொடர்புகளுக்கு

KURINCHI HOME

+94 76 290 1111
+94 777 044 501

address
541/5, Galle Road, Wellawatte



Allai VILLAS JAFFNA

## JOB VACANCY

Allai Villas is an iconic project by Heritage North (Pvt) Ltd. It is the first luxury house villas & mixed development resort project in jaffna. Born with a rich heritage of Jaffna, blended with diverse cultures, Heritage North (Pvt) Ltd offers modern and friendly working environments.

We are looking for the following professionals to join our team to take the project to greater heights and achieve success.

### Manager - Administration

- Minimum 3 years of experience in administration and management
- Experience in the construction industry would be added advantage
- Reading, writing and spoken skills in Tamil and English are necessary
- Able to draft letters, manage documents and coordinate with team and authorities is critical

### Accountant

- Fully or partly qualified in Professional Accounting
- Minimum 03 years of experience in middle or higher-level accounting
- Ability to work on accounting software such as QB, Zero etc.
- Able to manage bank, payments, daily accounts and final accounts

### Quantity Surveyor - Junior

- NCT with 4 years of experience in civil and interior
- Familiar with BOQ preparations, contractor payments and material reconciliation would be added advantage
- Familiar with AutoCAD, MS Project is necessary

please **mention the position on the subject** and send your CV to **allaivillas@gmail.com**

HERITAGE NORTH

34, Wembady Road, Jaffna
+94-740-111699
allaivillas@gmail.com





## இலங்கையின் முன்னணி முதலீட்டு நிறுவனத்துடன் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யுங்கள்

First Capital
A Janashakthi Group Company

| | |
|---|---|
| 29% | 3 மாதங்கள் |
| 28% | 6 மாதங்கள் |
| 27% | 12 மாதங்கள் |

- பாரம்பரிய வைப்புகளுக்கு உயர் வட்டி விகிதம்
- இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதம் வழங்கப்படுகின்றது.
- எங்களின் அழைப்பு மையம் (call center) ஊடாக நேரடியாக அணுகலாம்.
- முதிர்வுகள் மற்றும் மீள்ப் பெறுதல்களுக்கு விரைவான தீர்வு
- முதலீட்டு ஆலோசனைகள் மற்றும் சந்தைசார் தகவல்கள் First Capital Research பிரிவினால் வழங்கப்படும்.

மார்ச் 03/04/05 ஆம் திகதிகளில்

**யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சியில்** First Capital நிறுவனத்தினரை சந்திக்க முற்றவெளி மைதானத்திற்கு (Stall No.90) வருகைத் தாருங்கள்

அல்லது **0777 704 565** இற்கு அழையுங்கள்.

Address: No. 02, Deal Place, Colombo 03, Sri Lanka. | Email: info@firstcapital.lk | Website: www.firstcapital.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கு, கருவேலடி ஒழுங்கையில் அமைந்துள்ள விசாலமான வரவேற்பறை, 3 படுக்கை அறைகள், 2 குளியலறை, 2 சமையலறைகளுடன் வீடு வாடகைக்கு விடப்படும். (CS 23700)(3/6)

**075 087 3991, 071 792 6991**

## வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள நிறுவனத்துக்கு கணக்கு பதிவாளர் தேவை. (Accounts Book Keeper)
வயதெல்லை (21 - 50)
A/L, AAT Part மற்றும் கணினி முன் அறிவு
1 வருடத்துக்கு மேற்பட்ட வேலை முன் அனுபவம்
யாழ். நகரை வசிப்பிடமாக கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
சுயவிபரக்கோவை (CV) (CS 23694)(3/6)

**Jobsstrfilms@gmail.com Mob No : 077 393 5909**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி லோகேஸ்வரி நவரத்தினம்

திதி: பூர்வபக்க ஸப்தமி



இமயம் சரிந்ததுவோ எழில்
மாளிகை இருண்டதுவோ
உங்கள் திங்கள் முகம்
மறைந்து திசை தெரியாக்
கப்பலானோம்
கருவிலே எமைச்சுமந்து
கண் இமையாய்க் காத்த
கருணைத் தெய்வமே!
ஆடவல்லான் அம்பலவன்
அடியினையில் அமைதி பெற
வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள்
நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்.

மண் மகிழ: 07.03.1951
கண் நெகிழ: 27.01.2023

(CS 18859)(3/6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 04.08.1952
மறைவு: 27.01.2023

கடந்த 27.01.2023 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சுந்தரம் சிவலிங்கம்

(முன்னாள் பொது முகாமையாளர் – திருவையாறு பல நோக்குக் கூட்டுறவு சங்கம், மற்றும் கட்டடபொருள்கள் கூட்டுத்தாபனம்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுக்ள் இன்று (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு எமது இல்லத்தில் இடம் பெற்று தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ் நாச்சிமார் கோவிலடி) நடை பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வருகை தந்தும் தொலைபேசி ஊடாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாப செய்திகள் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பெரும் துயர் வேளையில் பல்வேறு வழிகளில் பேருதவிகள் புரிந்த அனைத்து உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்

(CS 47978) (3/6)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல புத்தக விற்பனை நிலையத்துக்கு

- **விற்பனைப் பிரதிநிதி (ஆண் /பெண்)**
- **உதவியாளர் (ஆண்/பெண்)**

உங்கள் சுயவிபரக்கோவையை Whatsapp செய்யவும். (CS 23696)(3/6)

**077 494 9683, 077 077 6469**

## காணி விற்பனைக்கு

அரியாலை மணியந்தோட்டம், ஆங்கில பாடசாலைக்குப் பின்பக்கமாக 50 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. யாழ். நகரிலிருந்து 7Km தூரம்.
அரியாலை உதயபுரம் முடிவில் கடற்கரையிலிருந்து இரண்டாவது காணி 4 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு.

(CS 23699)(3/6) **தொடர்பு: 077 423 5458**

## வர்த்தக காணி விற்பனைக்கு

Airport (கட்டுநாயக்கா) க்கு அண்மையில் வர்த்தக காணி (3 பரப்பு) கட்டடம் (3200 சதுர அடி) 3 பக்கம் வீதி, சிறந்த வருமானமுடையது. விலை பேசித்தீர்மானிக்கப்படும். (CS 22465 A)(3/6)

**077 340 2450, 075 806 9246**

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் யாழ் நகரில்
இருந்து 2km தொலைவில்
அராலி வீதியில்
1 1/2 நிலப்பரப்பு விற்பனைக்குண்டு.
(சோலை வரி உண்டு.)

**077 379 1633**

## Vacancy for Front officer

Young energetic Female Candidate below

- 32 Year with G.C.E O/L / A/L Qualifications
- One year Experience in relevent Field
- Good Interpersonal and Communication Skills
- Fluent in English and Computer lileracy
- Company Will be Paid attractive Salary

**Contact : 070 449 6525**

## மரண அறிவித்தல்

பிறப்பு: 06 . 02 . 1956



இறப்பு: 23 . 02 . 2023

### மரியதாஸ் லூர்துநாயகி

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் லூர்துநாயகி கடந்த (23.02.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் (யோகம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கிளமென்ற், குணகுந்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குருசுமுத்து, சிசிலியா தம்பதிகளின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், C.M.நெல்சனின் பாசமுள்ள சகோதரியும், டியூக் டிக்ஷன் (பெல்ஜியம்), லெசியா லக்ஷினி ( ஆசிரியர் - பாஷையூர் சென் அன்ரனீஸ்), கேபட் கட்ஷன் (கனடா), மறோமக்ஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பெற்றீசியா தர்ஷினி, செ.மெல்போன், மேரிஸ்ராலினி, நர்மதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செமிரா, மிறோன், செறோன், டிறோசன், மிசாளினி, டிறோசினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (27.02.2023) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் தூயமரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த [illegible] நண்பர்கள் அனைவரும் [illegible]

தகவல்
பிள்ளைகள்.

(cs23615) (2.6)

## நல்லூர் பிரதேசசபையில் 'மலையகம் 200' நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 26

இலங்கைக்கு, இந்திய வம்சாவளி தமிழர்கள் கூலித் தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு, சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் 'மலையகம் 200' எனும் தொனிப்பொருளில் இன்று ஞாற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேசசபை பண்பாட்டு மண்டபத்தில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கருத்துருவாக்கம், ஆவணப்படுத்தல் மற்றும் செயலாற்றுகை தொடர்பான நோக்கங்களில் இந்த நிகழ்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-14)

## காணி விற்பனைக்கு

இருபாலையில்
**4 பரப்பு காணி வீட்டுடன்**
விற்பனைக்குண்டு

தொடர்பு
0751877703
0777617396

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மோட்டர்
விற்பனைக்கு உண்டு.
(CS 23698)(3/6) தவம் : **070 707 1799**

## காணி விற்பனைக்குண்டு

கட்டப்பிராய் (வட்டக்குளம் வைரவர் கோயிலுக்கு சற்று முன்பாக) பருத்தித்துறை வீதியிலிருந்து 50M உள்ளாக ஒழுங்கையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகட்கு:
**077 457 5044, 077 083 4173**

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எண்ணை ஆலைக்கு ஆட்கள் தேவை. இரவில் வேலை செய்யக்கூடியவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**077 171 2336, 075 981 7124**

## விற்பனைக்கு

சாவகச்சேரியில் ஓடு, கதவுகள், யன்னல்கள், இடிபாட்டுடன் வீட்டின் பகுதிகள் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.

**077 456 6069**

## வீடு வாடகைக்கு

யாழ் நகரில் 3 அறைகள் கொண்ட வீடும், 3 மாடி வீடும்(10 அறைகள்) வாடகைக்கு உண்டு (நிறுவனங்கள் விரும்பத்தக்கது). படிக்கும் மாணவர்கள், வேலை செய்பவர்களுக்கான அறைகள் மற்றும் 13x45 அளவான களஞ்சிய சாலையும், சுற்றுலாப் பயணிகளுக்கான நாளாந்த, வாராந்த அறைகள், வீடுகள்(நவீன மயத்துடன்) வாடகைக்கு உண்டு.

**077 345 0039, 077 348 0039**

## வேலையாட்கள் தேவை

எழுதுமட்டுவாள் பகுதியில்
குடும்பமாக தங்கிநின்று
தென்னந்தோட்டத்தை
பராமரிப்பதற்கு சிறிய குடும்பம்
தேவை.

தொடர்புகளுக்கு:
**075 718 6329**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனே எங்கள் தலைவர் அவரை வாழ்நாளில் மறக்கோம்

## நாடாளுமன்றில் சிறீதரன் ஆவேசம்

கொழும்பு, பெப். 26
தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே எமது தலைவர். வாழ்நாள் முழுவதும் அவரை நாம் மறக்கப்போவதில்லை. இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் கட்டளை மீதான விவாதத்தில் உரையாற்றியபோது, நீதியமைச்சர் விஜேதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நீங்கள் இனவாதத்தை விதைப்பவர். நீங்கள் ஓர் இனவாதி. நீங்கள் தற்போதும் பிரபாகரனை மறக்கவில்லை, நாங்களும் மறக்கப்போவதில்லை. வாழ்க்கை முழுவதும் மறக்கமாட்டோம். எங்கள் தலைவர் பிரபாகரன் தான். அவர் நேர்மையான கண்ணியமான தலைவர். யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவுபெறும் நிலையில் பிரபாகரனை விமர்சிக்காதீர்கள், படித்தவர்கள், போல் உரையாற்றுங்கள். முட்டாள் போல் பேசவேண்டாம், நீங்களே இனவாதத்தை விதைப்பவர் - என்றார். (ஒ-14-இ)

# ரயில் கடவை திருத்த வாகனம் மோதியதில் மாணவி காயம்!

வவுனியா, பெப். 26
வவுனியா தாண்டிக்குளத்தில் உள்ள ரயில் கடவையை கடக்க முற்பட்ட வேளை, ரயில் கடவை திருத்தும் வாகனம் மோதியதில் மாணவி ஒருவர் காயமடைந்துள்ளார்.
தாண்டிக்குளம் ரயில் நிலையத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள ரயில் கடவையில் சமிக்ஞை விளக்கு மாத்திரமே பொருத்தப்பட்டுள்ளது.
சமிக்ஞை விளக்கும் சீராகச் செயற்படாது இருந்துள்ளது.
இந்தநிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை சைக்கிளில் வந்த பாடசாலை மாணவியொருவர், ரயில் கடவையைக் கடக்க முற்பட்டபோது ரயில் கடவை திருத்தும் வாகனத்துடன் மோதியதில் விபத்துக்குள்ளானார்.
விபத்தில் காயமடைந்த மாணவி வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
விபத்து சம்பவித்தவேளை, ரயில் நிலைய வாகனத்தை பொதுமக்கள் மறித்து வைத்திருந்து சில மணிநேரத்தின் பின்னர் விடுவித்திருந்தனர். (ஒ-14-110)

# குடும்பத்தலைவரை தீண்டியது பாம்பு

சாவகச்சேரி, பெப்.26
மட்டுவிலிலுள்ள தோட்டத்துக்குச் சென்ற குடும்பத்தலைவர் பாம்பு தீண்டியதால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
மட்டுவில் பகுதியிலுள்ள 38 வயதான குடும்பத்தலைவர் அப்பகுதியிலுள்ள தோட்டத்துக்கு கடந்த வியாழக்கிழமை சென்றார்.
அங்கு பயிர்களுக்கு நீர்பாய்ச்சுவதற்குச் சென்றவேளையில், பற்றைக்குள் மறைந்திருந்த பாம்பு அவரைத் தீண்டியது.
அதனையடுத்து அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஒ-14-9)

# சீன உத்தரவாதமின்றி விடுவிக்கப்படாது நிதி

## நாணயநிதியம் ஆணித்தரம்

கொழும்பு, பெப். 26
சீனாவின் கடன் உறுதிப்பத்திரமின்றி இலங்கைக்கான கடனை விடுவிக்கமுடியாது. சீனாவின் உத்தரவாதத்தை இலங்கை பெறுவது மிகவும் முக்கியமானது.
இவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் தலைவர் கிருஷ்ணா சீனிவாசன் சுட்டிக்காட்டியுள்ளார்.
அவர் மேலும் குறிப்பிட்டதாவது:
சீனாவின் நிதி உத்தரவாதம் இல்லாவிட்டாலும் இலங்கைக்கு நிதிவழங்க சர்வதேச நாணயநிதியம் பரிசீலித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது பொய்யான தகவலாகும்.
சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுவதற்கான நிதிக்குழுவின் ஒப்புதலைப்பெற இலங்கைக்குச் சிறந்த வழி சீனா உட்பட இருதரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து நிதியுத்தரவாதங்களைப் பெறுவதாகும்.
சீனாவின் கடன் உறுதிப்பத்திரமின்றி இலங்கைக்கான கடனை விடுவிக்கமுடியாது. சீனாவின் உத்தரவாதத்தை இலங்கை பெறுவது மிகவும் முக்கியமானது- என்றார். (ச-இ)

# செ.அன்புராசா அடிகளாரின் "அன்புள்ள ஆரியசிங்க" வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 26
செ.அன்புராசா அடிகளாரால் எழுதப்பட்ட 30 மடல்களின் தொகுப்பு நூலான "அன்புள்ள ஆரியசிங்க" தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் தனித்தனி நூல்களாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வெளியிடப்படவுள்ளன.
திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, நல்லை ஆதீன குருக்கள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-14)

## நாவற்குழியில் டெங்குச்சோதனை

# 28 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல்!

சாவகச்சேரி, பெப். 26
சாவகச்சேரி சுகாதார மருத்துவஅதிகாரி பணியகத்தின் ஏற்பாட்டில் நாவற்குழி மேற்கில் முன்னெடுக்கப்பட்ட விசேட டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனையில் 28 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.
யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் அறிவிப்பின் பிரகாரம் யாழ்.குடாநாட்டு பகுதிகளில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
நாவற்குழி மேற்கில் பிரதேச சுகாதாரத் திணைக்கள அலுவலர்களுடன் பொலிஸார், பிரதேச செயலகத்தினர், சாவகச்சேரி பிரதேசசபையினர், டெங்குக் கட்டுப்பாட்டு உதவியாளர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் சோதனையில் ஈடுபட்டனர்.
குடியிருப்புகள், தனியார் பாடசாலைகள் அரச,தனியார் அலுவலகங்கள், தொழிற்சாலை, கட்டட நிர்மாணத் தளங்கள், வழிபாட்டுத்தலங்கள் மற்றும் பொதுஇடங்கள் உள்ளடங்கலாக 268 இடங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.
சோதனையின்போது நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை வைத்திருந்த 28 குடியிருப்புகள் கண்டறியப்பட்டு அவற்றின் உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ச-9)



யாழ்.மாவட்டச் செயலக உற்பத்தித்திறன் பிரிவால் நடத்தப்பட்ட சிறந்த உத்தியோகத்தருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

" உங்கள் குறைகளை நீங்களே அடையாளம் கண்டு கொள்வதுதான் வளர்ச்சியின் அடையாளம்"

– ஷேக்ஸ்பியர்


## போதனாவும் 'பொதுக் கழிவும்'

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகளை எங்கு எரியூட்டுவது என்ற விடயம் நாளுக்கு நாள் சர்ச்சையாகி வருகின்றதே அன்றி அதற்கொரு முடிவு கண்டபாடில்லை. இதுவரை காலமும் தெல்லிப்பழையில் எரிக்கப்பட்டுவந்த இந்த மருத்துவக் கழிவுகளை, அங்கு ஏற்பட்ட கடும் எதிர்ப்பை அடுத்து, வவுனியாவுக்கு அனுப்பி வைப்பது என்று வடமாகாண சுகாதார அமைச்சின் கூட்டத்தில் முடிவாகியிருக்கின்றது. எனினும், வவுனியாவிலும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகளை எரிக்கமுடியாது என்று போர்க்கொடி தூக்கப்பட்டிருக்கின்றது. ''வவுனியா மருத்துவமனையின் கழிவுகள் ஓமந்தையில் எரிக்கப்பட்டுவரும் நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கழிவுகளையும் இங்கு எரிக்க முற்படுவது தகாதசெயல். ஆதலால், யாழ்ப்பாணம் போதனாவின் கழிவுகளை யாழ்ப்பாணத்திலேயே எரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்று தெரிவித்திருக்கின்றார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன்.

இங்கே இரண்டு விடயங்களை பொதுப்புரிதலின் பாற்பட்டு அனைவரும் தெளிவாக விளங்கிக்கொள்ளவேண்டும். முதலாவது விடயம், இந்த மருத்துவக் கழிவகற்றல் விவகாரத்தில் மருத்துவமனையின் நிர்வாகத்தையோ – மருத்துவர்களையோ நொந்துகொண்டால் அது ஆகப்பெரும் மடமைத்தனமன்றி வேறில்லை. மருத்துவர்களினதோ அல்லது தாதியர்களினதோ வீட்டுக் கழிவுகள் மருத்துவமனையினூடாக அகற்றப்படவில்லை. ஆதலால், இதில் இதர மாவட்டத்தினருடனும் மருத்துவமனைகளுடனும் பகையுணர்வை வளர்த்துக்கொள்ளவோ – மனக்கிலேசங்களை உருவாக்கிக்கொள்ளவோ மருத்துவர்களுக்கும் போதனாவின் நிர்வாகத்துக்கும் எந்த அவசியமும் இல்லை. மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளையும் ஏற்படுத்தித்தருமாறு துறைசார் அதிகாரிகளுக்கு ஒற்றைக் கடிதத்தின்மூலம் தெரிவித்துவிட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளையும் நகர்வுகளையும் பார்த்துவிட்டுச் செல்ல அவர்களால் முடியும். எனினும், இது விடயத்தில் அவர்கள் கொண்டிருக்கும் கூடுதல் அக்கறைக்காகவும் – பொறுப்புணர்வுக்காகவும் அவர்களைப் பாராட்டத்தான் வேண்டுமேயன்றி, நொந்துகொள்ளக்கூடாது.

இரண்டாவது விடயம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அமைவிடம் யாழ்ப்பாண மாவட்டமாக இருக்கலாம். ஆனால், அது யாழ்ப்பாணத்தவர்களுக்கு மட்டுமான சொத்தல்ல. யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு போதனா மருத்துவமனையைப் பயன்படுத்துகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு வடமாகாணத்தின் இதர மாவட்ட மக்களும் பயன்படுத்துகின்றார்கள்தான். ஆதலால், இந்த மருத்துவக்கழிவுகள் 'எம்முடையவை' என்ற பொதுப்புரிதலை மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் வளர்த்துக்கொண்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சீரியதும் சிறப்புமான செயற்பாட்டுக்கு வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும்.

தெல்லிப்பழைக்கோ அல்லது வவுனியாவுக்கோ மருத்துவக் கழிவுகளை அனுப்பிவைக்கவேண்டும் என்றோ, அந்தப் பகுதியினருடன் மனக்கிலேசங்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்றோ யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு விதியல்ல. அதில் அவர்களுக்கு விருப்பமும் இல்லை. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கழிவுகளை தனியான எரியூட்டல் மையத்தின் மூலம், யாழ்ப்பாணத்தில் எரியூட்டுவதற்கு இதுவரை அந்த மருத்துவமனையாலும், சுகாதார அமைச்சாலும் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்போதும்கூட கோம்பயன்மணல் இந்து மயானத்தின் பகுதி பரிந்துரைக்கப்பட்ட போதிலும் ஆளுநர் அதற்குத் தடைபோட்டதால்தான் 'தற்காலிகமாக' அடுத்தகட்ட நடவடிக்கைகளை தேடவேண்டியிருக்கின்றது. விமர்சிப்பதும், அறிக்கைகளை வெளியிடுவதும் அவ்வளவு இலகுவானவை. மக்கள் பிரதிநிதிகள் என்றிருப்பவர்கள் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், எப்போதோ தீர்வு கண்டிருக்க வேண்டிய விவகாரம் இது. அப்படி தீர்வு காணத் தவறிவிட்டு, இப்போது கழிவுகளை எரிக்க போர்க்கொடி தூக்கும் அரசியல்வாதிகளை நினைத்து அழுவதா? சிரிப்பதா?



### மே கலவரங்கள் தொடர்பாக

# சவேந்திரவுக்கு எதிராக சி.ஐ.டி.யின் விசாரணை

### *நீதிமன்றத்தில் பரிந்துரை*

கொழும்பு, பெப். 26

கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிராக, மே மாதம் 9ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் ஏற்பட்ட கலவரத்தைத் தடுக்கத் தவறியமைக்காக சவேந்திர சில்வாவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நீதிமன்றத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிராக மே மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் வெடித்த மக்கள் போராட்டம் படிப்படியாக கலவரமாக மாறியது. இதில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாத நிலை தோற்றம் பெற்றது. இதையடுத்து கோத்தாபய நாட்டிலிருந்து தப்பியோடி பதவி துறந்தார். இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவே, முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரிவு ஊடாக விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்று நீதிமன்றத்துக்குப் பரிந்துரைத்துள்ளது.

வன்முறைகளை இராணுத்தினரும் பொலிஸாரும் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியும், அமைச்சர் பந்துல குணவர்த்தன உள்ளிட்ட சிலர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. இதன்போதே அந்தக் குழு தனது பரிந்துரையை முன்வைத்தது. இந்த மனு எதிர்வரும் மே மாதம் 22ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ம)

### *சீனாவில் கொரோனா தீவிரம்*

# சீனச் சுற்றுலாவிகள் இலங்கை வருகை!

கொழும்பு, பெப். 26

சீனாவிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சீனாவில் கொரோனாத் தொற்று தீவிரமாகியுள்ள நிலையில், சீனாவிலிருந்து சுற்றுலாவிகள் வருவதானது பல்வேறுபட்ட அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் அவர்கள் நாட்டுக்கு வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த மூன்று வருடங்களாக கொரோனாத் தொற்று பரவல் காரணமாக சீன சுற்றுலாப் பயணிகள் வருகை தடைப்பட்டிருந்தது. 2018ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 2 லட்சத்து 80 ஆயிரம் சீன சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை

27.02.2023

திங்கட்கிழமை

மாசி 15

சுபநேரம் : 12.29 – 01.59

ராகுகாலம் : 07.59 – 09.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS
## JAFFNA COLLEGE, VADDUKODDAI

1. The Chairman, Procurement Committee - Jaffna College, Va ddukoddai now invites sealed bids from eligible and qualified bidders for the building renovation works described in the table below.

| Description of Work | Estimated Cost (Million Rs.) | Construction Period | Required CIDA grade | Bid Security (Rs.) & Validity up to |
|---|---|---|---|---|
| Construction of Bishop Rt. Rev. S.Kulendran Block (Stage II) & Renovation and Rectification Work to the YMCA Block (Stage II) & Bunker Hall at Jaffna College, Vaddukoddai Contract No: JC/BLDG/2023/01 | 32.00 | 180 days | C5 and above (Building Works) | 320,000.00 & 27.06.2023 |

2. Interested eligible bidders may obtain further information from the Principal's Office, Jaffna College, Vaddukoddai, (Tel.: 0212250888, Email:1823jaffnacollege@gmail.com) and inspect the Procurement Documents thereon any working days from 07.30 Hrs to 14.00 Hrs.

3. To be eligible for Contract award the successful bidders shall not have been blacklisted and shall meet the CIDA registration and qualification requirements listed above. Additional details and work experience requirements are provided in the Procurement Documents.

4. A complete set of Procurement Documents in the English language may be purchased by interested bidders on the submission of a written application to the Principal, Jaffna College, Vaddukoddai from 28th February 2023 until 14th March 2023 from 7.30 Hrs to 14.00 Hrs on working days upon payment of non-refundable fees of Rupees Two Thousand (Rs.2000.00 excluding VAT) for a set. The method of payment will be cash.

5. Bids (Original and Duplicate) must be delivered to the Chairman, Procurement Committee - Jaffna College, Jaffna College, Vaddukoddai on or before 12.00 Hrs on 15th March 2023. Late Bids will be rejected. Bids will be opened soon after the closing in the presence of the bidders or their authorized representatives who choose to attend.

6. All Bids shall be accompanied by a Bid Security for an amount mentioned in the above table and it shall be obtained from a recognized organization. The Bid Security should be valid up to 27th June 2023.

7. Pre-bid meeting will be held at the Jaffna College, Vaddukoddai commencing at 09.30 Hrs on 09.03.2023.

8. Decision of the Procurement Committee of Jaffna College shall be final.

**26.02.2023**

**The Chairman**
**Procurement Committee - Jaffna College**
**Vaddukoddai**


## கீரிமலை முத்துமாரி வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 26

கீரிமலை ஸ்ரீமகா முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.


தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் எதிர்வரும் 6ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



புனித நீக்கிலார் முன்பள்ளி மாணவர்களின் திறனாய்வும் கௌரவிப்பு நிகழ்வும் முகாமைக்குழுத் தலைவர் திருமதி மடோனா அருள்ராஜ் தலைமையில் கடந்த 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. (ய-159)


# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 01 . 1949 — மறைவு 13 . 02 . 2023



## கணபதிப்பிள்ளை - அம்பிகைபாகன்
**(காரைநகர்-இலண்டன்)**

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகக் கொண்ட (இங்கிரியா) கணபதிப்பிள்ளை - அம்பிகைபாகன் கடந்த (13.02.2023) திங்கட்கிழமை இலண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இங்கிரியா கணபதிப்பிள்ளை - தெய்வானைப் பிள்ளையின் அன்பு மகனும், வலந்தலையைச் சேர்ந்த, முன்னாள் புகையிரத நிலைய அதிபர் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - பரமேஸ்வரி (பரஞ்சோதி)

தம்பதியின் அன்பு மருமகனும், சந்திராவின் பாசமிகு கணவரும், அபிராமியின் அன்புத் தந்தையும்,விபுலனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி பூரணம் பொன்னம்பலம், இராஜேஸ்வரி இளையதம்பி, பத்மநாதன், மற்றும் பாலசிங்கம் (T.K.பாலா - யசோ பவுனிங் சென்ரர்- நீர்கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தோழர் வி.பொன்னம்பலம் (VP - அளவெட்டி), Dr.S.S.இளையதம்பி, கமலாம்பிகை- பத்மநாதன், மற்றும் சரோஜினிதேவி- பாலசிங்கம், சித்திரா - தர்மராஜா (கனடா), தவக்குமார் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், சின்னத்தம்பி சிவராசா- வாசுகி சிவராசா தம்பதியின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2023) திங்கட்கிழமை, 29, Blackshaw Road, London, SW17 0DH என்ற முகவரியில் உள்ள Lambeth Crematorium இல் காலை 8.45 இற்கு நடைபெற்று, ஈமைக் கிரியைகள் முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு:-** இன்று (26.02.2023) காரைநகர் வாரிவளவு இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**மனைவி -சந்திரா +44 7982 236467**

(CS 23...5)



# மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 12 . 1962 — இறப்பு 25 . 02 . 2023



## அந்தோனிப்பிள்ளை மரியதாஸ்
**(முன்னாள் நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்)**

மட்டக்களப்பு கல்முனையை பிறப்பிடமாகவும் இல. 39A/10 புதுவீதி, கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் அவர்கள் நேற்று (25.02.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை பற்றிமாமேரி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பீதாம்பரம் திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பமலரின் பாசமிகு கணவரும், மரினோ சஞ்சேய் (மருத்துவ பிரதிநிதி, A.Baur & Co (Pvt) Ltd), மரியற் சயந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல சேவைகள் நிலையம் - கிளிநொச்சி), கிங்ஸ்ரன் றொகான் (வானவில் ஆடைத் தொழிற்சாலை - கிளிநொச்சி), றெஸ்னி (யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் 2021 உயர்தர பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமலினி (ஆசிரியர் புனித திரேசாள் பெண்கள் கல்லூரி - கிளிநொச்சி), ஒஸ்ரின் வினோத் (அஞ்சல் அலுவலகம் - கிளிநொச்சி), விஸ்னுகா ஆகியோரின் மாமனாரும், எய்டன், ஜெய்டன், சரோன், மதுசங்க ஆகியோரின் பாசமிகு பேரனும், மரியநாயகி யோகமலர், காலஞ்சென்ற ஹென்றிக் தேவதாசன், காமலிற்றா சோதிமலர், விமலதாசன், ஜேசுதாசன், அரியமலர், பத்மநாதன் ஆகியோரின் சகோதரனும், அற்புதமலர், றஞ்சிதமலர், அன்ரனி ஏகாம்பரம், நோபேட் ஏகாம்பரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27.02.2023) திங்கட்கிழமை காலை அவரின் இல்லத்தில் இருந்து எடுக்கப்பட்டு கொய்யாத்தோட்டம் கிறிஸ்துஅரசர் ஆலயத்தில் காலை 9.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு கொண்டு செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.39A/10, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 96 90 179**

(CS 23713) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் (V). 1993 இல் பிறந்த செவ்வாய்க்குற்ற மற்ற. கொழும்பில் உயர்பதவி வகிக்கும் பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை. (CS 23064) 4,6

**075 863 1281**

## கடை வாடகைக்கு

A-9 வீதி கொடிகாமம் சந்தியில் 2மாடி கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு. (CS 23666) (3/6)

**076 661 8169, 077 659 7250**

## கணினி உபகரணங்கள் ஏல விற்பனை

எமது கல்லூரியில் பாவனையில் இல்லாத கணினி உபகரணங்களை 27.02.2023 ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு ஏலவிற்பனை செய்ய கல்லூரி நிர்வாகம் தீர்மானித்துள்ளது. ஆர்வமுடையவர்கள் கல்லூரி அலுவல கத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அதிபர்,**
**சென்.ஜோண்ஸ் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.** (CR/39310) 4,6

**A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!**

வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

*கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling*
*அழகுக் கலை*, **Facials**, மணப்பெண் அலங்காரம்,
பலவிதமான சேலை அணியும் முறைகள், ஆரி எம்ரோய்டரி

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 04.03.2023 சனி காலை 10.30**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08.03.2023 புதன் காலை 10.30**

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

### யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

## இரா. முதியோர் சேவை முன்னேற்பாடு - 2023

- இடம் - கனகபுரம் , கிளிநொச்சி
- தகுதி - 60 வயதுக்கு மேற்பட்டோர் தன் சொந்தத் தேவை களை தாமே செய்யக் கூடிய நிலையில் உள்ளோர். ஆதரவற் றோர், தனிமைப்படுத்தப்பட்டோர். (இருபாலாரும்).
- தபால் மூலம் விண்ணப்பிக்கலாம்.

**முகவரி :- ச. ஜெகன்**
**32, கனகபுரம்,**
**கிளிநொச்சி.**

- மனுதாரர் முற்பதிவைத் தொடர்ந்து உரிய அரச அனுமதி பெற்ற பின் மனுதாரருக்கு அழைப்பு அனுப்புவோம்.
- **உணவு, தங்குமிடம் உட்பட இலவச சேவை.**

**பாலா - 074 205 8803**
**ஜெகன் - 077 813 9852**

## Holy Cross School of Health Science

**767/4, Beach Road, Jaffna.**

**Care Giver (NVQ III)**
Qualification - G.C.E (O/L)
Duration - 6 Months

**Diploma in Nursing**
Qualification - G.C.E (A/L)- Completed
Duration - 3 Years

**Nurse Assistant (NVQ L IV)**
Qualification - G.C.E (O/L)
Duration - 18 Months

**Care Giver (ELDERS) NVQ Level 04**
Qualification - G.C.E (O/L)
Duration - 12 Months

இதற்கான விண்ணப்பங்களை 10.03.2023 திகதிக்கு முன்னதாக தங்களுடைய சுயவிபரக் கோவையுடன் (Bio Data) நேரடியாகவோ OR தபால் மூலமாகவோ எம்மைத் தொடர்பு கொள்ளவும். மேலும் 18 தொடக்கம் 30 வயதானவர்கள் குறிப்பிடதக்கவர்.



(CS 23691) 1-6

தொடர்புகளுக்கு:
**077 42 70 120 / 021 22 22 423 / 077 99 19 711**

## PFIRC பிரசாந்த் குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

No.77, Harrington Road, Chetpet, Chennai – 600 031, Tamilnadu, India.




medicare

**இலவச மருத்துவக் கண்காட்சி!**

**3rd, 4th, 5th MARCH 2023**

**கொழும்பு BMICH**

**Stall No. B1, B2, B3, B4**

பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவரை நேரில் சந்தித்து உங்களது குழந்தையின்மைப் பிரச்சினைகள் பற்றிய இலவச ஆலோசனைகளைப் பெறலாம்

35 years MEDICARE FOR WOMEN

**25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தம்பதியரின் குழந்தைக் கனவுகளை நனவாக்கி வரும் மருத்துவமனை**

**விபரங்களுக்கு: 0760155883**

### பிரசாந்த்

மருத்துவமனை தகவல் மையம்
ரோயல் மருத்துவமனை
62, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
infopfrcsl@gmail.com www.pfrcivf.lk

**சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குழந்தையின்மைக்கான அதிநவீன சிகிச்சைகளுக்கு மாபெரும் சிறப்புச் சலுகைகள்!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாப்பிள்ளை தேவை

01. அனலைதீவு - வேலணை. இந்து. கௌரவகுலம் (V). 1990. மகம். Bachelor of Optometry, Australia Citizen. பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் -32633.

02. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1991. உத்தரம். Gradute. (Family Law, Lawyer. Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32297.

03. உரும்பிராய் - மாவிட்டபுரம். இந்து. கௌரவகுலம் (V). 1991. புனர்பூசம். MBBS Doctor, Australia வில் வேலை செய்து கொண்டிருக்கும் USA Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32050.

04. புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம் (V). 1992. உத்திரட்டாதி. ACCA Complited Accountant, Canada, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

05. தெல்லிப்பளை - கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V). 1993. அச்சுவினி. BSc Nursing Jaffna, University, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

06. பருத்தித்துறை - சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V). 1986. திருவாதிரை. MSc in IT and Charted Financial Analyst, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32904.

07. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1995. அத்தம், BSc, Post Graduate Dip Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

08. அல்வாய். இந்து. கௌரவகுலம் (V). 1987. பரணி. BSC (Hons) Chemical Engineering Technology, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

09. கந்தர்மடம். இந்து. கௌரவகுலம் (V). 1990. அச்சுவினி. BBA, Accountant, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண்- 31884.

10. உடுப்பிட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1995. அவிட்டம். Masters of Bio Medical (UK), UK Citizen. பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

11. காரைநகர் - பருத்தித்துறை. இந்து. கௌரவகுலம் (V). 1995. பூரம். BSc in Accounting and Finance, UK Citizen. பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

12. உடுவில் - இளவாலை. இந்து. கௌரவகுலம் (V). 1990. மிருகசீரிடம். MBBS Doctor, UK Citizen. பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண்- 32235. (CS 23610)(3/6)

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728

# LAND WANTED

1000 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்ட கட்டிடத்துடன் (120 பேர்ச்) நிலம் தேவை!

- அலுவலகம், களஞ்சியம் மற்றும் பணியிடத்திற்கு ஏற்றவகையில்
- யாழ்ப்பாணம் A9 பிரதான வீதிக்கு அருகில், நீண்ட கால வாடகைக்கான கட்டணத்தை அறியத்தரவும்.

071 922 8888
070 240 2441

Vajira House

1916 ம் ஆண்டு தொடக்கம், 107 வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையினர்

வஜிர ஹவுஸ்

23, டீல் பிளேஸ் A, கொள்ளுப்பிடி

Share இம் மதிப்புமிக்க செய்தியை உங்கள் வெளிநாட்டு நண்பர்கள் மற்றும் உறவுகளுக்கு மூலம் பகிரவும்

உங்கள் நிலத்தில் வீட்டை கட்டி கொள்ளலாம்

→யாழ்ப்பாணம் →வவுனியா →கண்டி
→மன்னார் →கொழும்பு →முல்லைத்தீவு




ரூ10,000 செலுத்தி வீட்டு வேலையை ஆரம்பிக்கலாம்.

இன்றே அழையுங்கள் Ms.Sanjeevkumar

24 hrs 0719 228 888



1916 ம் ஆண்டு தொடக்கம், 107 வருட 4 தலைமுறையாக பிரித்தானிய ஆட்சிக்கால வரலாறு உடைய

வஜிர ஹவுஸ்

23, டீல் பிளேஸ் A, கொள்ளுப்பிடி

# மணமகள் தேவை

யாழ். இந்து (v) 1986ஆம் ஆண்டு அத்த நட்சத்திரம் U.K சிற்றிஷன் (Quantity Surveyor) மணமகனுக்கு பட்டதாரி மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (CS 22925)(3/6)

தொடர்பு: 076 555 6571

# காணி விற்பனைக்கு

ரவிகராஜ் அருகாமை சாந்தசோலை வீதி, பூந்தோட்டம் எனும் முகவரியில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது.
விலை பேசித்தீர்மானிக்கப்படும். (CS 23689)(3/6)

T.P : 077 656 3582

# வவுனியாவில் காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒருபரப்பு மற்றும் இரண்டு பரப்பு உறுதிக் காணிகள் விற்பனைக்குள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

077 656 3582

# காணி விற்பனைக்கு

A-9 வீதியிலிருந்து 100m தூரத்தில் நுணாவில் வைரவர் கோவிலுக்கு அண்மையில் 8 பரப்பு விஸ் தீரணமுள்ள காணியில் பின்புறமாக கிணறு இல்லாத பக்கமாக இரண்டு பரப்பு அல்லது மூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை (CS 23692)(3/6)

076 108 1757, 077 598 3217

# பெண் பணியாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் ஐந்து வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற "வல்வை முதியோர் இல்லத்திற்கு" சமையல் வேலை தெரிந்த பெண் பணியாளர் தேவை. உணவு தங்குமிட வசதி இலவசம்

தொடர்புகளுக்கு:
077 210 6857, 077 154 2067
021 226 5551
(CS 22923)(3/6)

# மணப்பெண் தேவை

01. புங்குடுதீவு, இந்து கௌரவகுலம் (V), 1979, விசாகம், CIMA, Business Administration, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 15039

02. கோப்பாய், இந்து கௌரவகுலம் (V), 1984, சதயம், MBBS, Doctor, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32160

03. திருநெல்வேலி. இந்து கௌரவகுலம் (V), 1990, விசாகம், MBBS, Doctor, UK citizen, மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32016

04. திருநெல்வேலி. இந்து கௌரவகுலம் (V). 1983. ரோகிணி. B.Sc (Hons) Computer Science, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31305

05. உரும்பிராய். இந்து கௌரவகுலம் (V), 1974. திருவோணம். B.Sc Finance Advisor, கனடா. Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 23110

06. மல்லாகம் - உடுவில். இந்து கௌரவகுலம் (V). 1984. சுவாதி. B.Sc Masters in Statistics. USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 28963

07. காரைநகர் இந்து கௌரவகுலம் (V). 1986. உத்திராடம். Airspace Engineer, USA, Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 24891

08. மீசாலை. இந்து கௌரவகுலம் (V). 1983. சதயம். M.Sc Engineer, UK Citezen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 39216

09. யாழ்ப்பாணம், இந்து கௌரவகுலம் (V), 1984. சுவாதி. B.Sc,Business Managment,UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31799

10. காரைநகர். இந்து கௌரவகுலம் (V). 1975. விசாகம். M.Sc, Business, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 25104

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728

## வீடு விற்பனைக்கு

பம்பலபிட்டியில் 3ம் மாடியில் 990Sqft 2 படுக்கை அறைகள் கொண்ட வீடு உடனடி விற்பனைக்கு உண்டு.

தரகர் வேண்டாம் Contact : 076 05 89 822

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 43 வயது திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை. (CS 49286)(3/6)

077 905 8615 (வைபர் & வட்ஸ்ஆப்)

# விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஹீரோ, பிளசர், 2019 ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு.
விலை 395000/= (CS 23451)(2/6)

T.P.: 077 163 2061

# வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

077 265 5787, 077 607 4843

## LIFE PARTNER / PROPOSAL

Younger looking attractive Sri Lankan Tamil lady @ lateforties looking for a suitable partner from SL / overseas. I am an academic, working on my own, enjoying a dynamic lifestyle. Like to meet a kind soft spoken gentleman in the view to settle in. Age : 42-49. vinor6000@gmail.com

# வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள மதுபானசாலைக்கு Bar keepar தேவை. (பகுதி நேரம்) 4.00 pm - 10.pm
- வயதெல்லை 40 - 60
- முன்அனுபவம் உள்ளவர்கள்
- யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் விரும்பத்தக்கது. (CS 23693)(3/6)

தொடர்பு : 077 393 5909 (9.00am-5.30pm)

# மணமகள் தேவை

யாழ். இந்து 5'3" உயரமுடைய. 28 வயதுடைய. Assistant Accountant ஆக லண்டனில் பணிபுரியும் அழகான மண மகனுக்கு இலங்கையில் / லண்டனில் பிறந்து தற்போது லண்டனில் வசிக்கும் PR உடைய படித்த. அழகான மணமகள் தேவை.

076 63 24 005
propuk1994@gmail.com

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிறந்து லண்டனில் வசிக்கும் 43 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. லக்கினம் மீனம். இராசி : கடகம். இந்து கௌரவகுலம் (V) அழகிய பெண்ணை தேடுகின்றோம்.

WhatsApp:00 44 7956 274856
E-mail:mpact.uk@gmail.com

# கணக்காளர் தேவை

யாழ்ப்பாணம், அச்சுவேலியில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்துக்கு "Accountant" தேவை.
ஆண் , பெண் இருபாலாரும்

தகைமை:- Chartered Accountant அல்லது அதற்கு இணையான கற்கைநெறி முடித்த குறைந்தது இரண்டு வருடங்கள் அனுபவமுள்ளவர்கள். தகுதியானவர்கள் மட்டும் CV ஐ whatsapp ஊடாக அனுப்பவும்.
(தயவு செய்து Call பண்ண வேண்டாம்)

0777 743 578 (CS 23602)(4/6)

# வாடகைக்குத் தேவை

நாவற்குழி கைதடி விலாசத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு மாதாந்த வாடகைக்கு டெலிவரி வாகனங்கள் தேவை.
சுப்பர் A/C அல்லது பட்டா போன்றவை விரும்பப்படும்.

தொடர்புகளுக்கு
077 732 4117, 076 399 7535

# கணித வகுப்பு

G.C.E. (O/L) மற்றும் தரம் 6 முதல் 10 வரை கணித பாடம் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் கற்பிக்கப்படும். (CS 23671)(3/6)

077 937 0228


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாவடி, கொக்குவிலை பிறப்பிடமாகவும் உயரப்புலம் மற்றும் இங்கிலாந்தினை வாழ்விடமாகவும் கொண்ட

## அமரர் திரு. கந்தையா கந்தப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யா/ இந்துக்கல்லூரி)

அவர்களின் மறைவின் முதலாம் ஆண்டின் நினைவு நாள் 02.03.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு இல-82 உயரப்புலம், ஆனைக் கோட்டையில் (உத்துங்க விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில்) அமைந் துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும்,நினைவு அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு : சிறிரஞ்சன் - 077 187 9195
அனபாயன் - 077 956 0249
பார்த்திபன் - 074 054 8364

கந்தப்பிள்ளை குடும்பத்தினர்

(CS 49282) (3/6)

# JOB VACANCY

We are a leading Sea food exporter in Sri Lanka and situated at Jaffna, looking for a competent and dynamic individual for the following job profiles.

## ASSISTANT MANAGER - EXPORT

**Responsibilities:**

- Managing the entire Export process to support the company's Processing and trading operations.
- Streamline the entire documentation and maintenance of files for inspection for auditors.
- Develop, Implement, improve systems and policies to administer documentation process required to import and export.
- Knowledge of BOI ,Imports and Exports procedures, logistics, customs processes and shipment handling are preferred .
- Ability to handle bank matters to clear import documents and present Export documents to banks to receive proceeds.

**Skills / Qualifications:**

- Degree / Diploma Level Professional Qualifications in Logistics / Shipping / Import and Export (CIM/SLIM Marketing )
- Experience of 2-5 years in an import and Export environment
- Process in depth and up to date knowledge of customs rules and regulations.
- Very Good Communications and Organizational skills.
- Male candidates in ages of 30-40
- Should be able to work independently and result oriented.

## ASSISTANT ACCOUNTANT

**The Job will involve**

- Daily accounting functions (in and outwards)
- Implementing control where necessary
- Managing all routine payments to statutory institutions etc.
- Arranging all payments
- Preparation of monthly management information
- Attending to all accounting function up to the final account for auditing
- Routine accounting correspondence and regular and timely updates.

**The ideal Gent we are looking at should be.**

- In the age group of 30-50 years and with a thorough accounting knowledge
- With part qualifications in CA/CIMA/ACCA or with a recognized degree in finance
- Able to prepare final accounts for auditing
- With at least 2 years' experience in an executive position handling similar accounting duties
- Thorough in all accounting function and familiar with payment such as EPF, ETF, VAT etc...
- Computer savvy and a good knowledge in Excel & QB , Busy'
- Auditing experience will be an advantage

  Should be able to work independently and result oriented.

If you feel like you are the best candidate for the above vacancy, please forward your CV to the following E-Mail.

**E-Mail: info@suganth.lk**

**Please mention the post applying in the subject line of your E-Mail.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 05 - 1938



மறைவு 24 - 02 - 2023

## கதிரேசு பொன்னுச்சாமி

மீசாலை வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு பொன்னுச்சாமி அவர்கள் கடந்த (24.02.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தாமோதரம் பிள்ளை, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நந்தகுமாரி, நந்தகுமார், கமலகுமாரி, ரதிகுமாரி, சசிகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன், சிவராஜிதன், ரஜனி, காலஞ்சென்ற பிரபாத் மற்றும் தயாளன் ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வராசா, அன்னலட்சுமி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், தனுராஜ், இன்பராஜ், தசியன், தன்சி, சம்சனா, துவாரகன் ஆகியோரின் அன்புப் பேரனும், அசாருஜனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2023) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரயைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மீசாலை வடக்கு, மீசாலை.

077 864 9923

தகவல் : குடும்பத்தினர்

(CS 23347 ) (3/6)

# மரண அறிவித்தல்



## தம்பு அருந்தவராஜா

யாழ்ப்பாணம் முள்ளானையை பிறப்பிடமாகவும் சில்லாலையில் வசித்தவரும் தற்பொழுது லண்டன் (East Ham) வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு அருந்தவராஜா கடந்த (15-02-2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் தம்பு செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் துரையப்பா பரமகுருநாதன் (அராலி) வடிவாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும், சசிகலாதேவி (கலா) அவர்களின் அன்புக் கணவரும், டர்ச்சனா (இலங்கை), (ஜேர்மனியில் வசிக்கும்) டர்சன், டர்சிகன், டக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கார்த்தீபன், ஜானா, தாட்சாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும், டயான், யாழினி, லீடகலா, கதிர் ஆகியோரின் அன்பு பேரனும், செல்வராணி, தவேந்திரராசா, சற்குணராசா, மலர்ராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணசிங்கம் (நோர்வே), தனபாலசிங்கம் (ஜேர்மனி), ஜெயசிங்கம் (நோர்வே) மற்றும் அமரர் தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27-02-2023) திங்கட்கிழமை "Jack Carter Pavilion" (Oakfield playing fields), Fencepiece road, Barkingside, IG6 2JL, United Kingdom. லண்டன் நேரப்படி பிற்பகல் 1.00 தொடக்கம் 3.30 வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் "Forest Park Crematorium" Forest road, Hainault, Essex, IG6 3HP, England. பிற்பகல் 3.30 தொடக்கம் 4.30 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி - +947 7859 2020
மகன் - +491 609 3820 327 +491 763 261 2665
மருமகன் - +947 4090 2741

தகவல், குடும்பத்தினர்.

(cs23697) (2/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாவிகளை கவருவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்!



## ஜனாதிபதி உறுதியளிப்பு

கொழும்பு, பெப். 26

பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறைக்கு புத்துயிரளிக்கும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அதற்கமைய வருடம் முழுவதுமான சுற்றுலாத்தலமாக இலங்கையை மாற்றியமைத்து சுற்றுலாவிகளை கவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுடன் காலியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியால் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளனர். அதனை வெற்றிகொண்டு சுற்றுலாத்துறை புத்துயிர் பெறுவதற்கான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 20 லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதற்கும், ஒரு சுற்றுலாப்பயணி, நாளொன்றுக்கு 500 டொலரை செலவிடக்கூடிய வகையில் சிறந்த வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை கிடைத்ததும் விரைவில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இலங்கையில் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுள்ளது என்ற செய்தி உலகுக்கு எடுத்துரைக்கப்படவேண்டும். கடந்த ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் நாட்டில் இடம்பெற்ற போராட்டங்களின் பின்னர் சுற்றுலாப் பயணிகள் வருகையில் வீழ்ச்சி நிலை ஏற்பட்டது. அது சரிசெய்யப்படவேண்டும் - என்றார். (ச-இ)


### நாய் குட்டி விற்பனைக்கு உண்டு

35 நாள் நிரம்பிய " லயன் ஜெர்மன் ஷெபர்ட்" நாய் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 223 0524

### கட்டட கட்டுமான நிறுவனம் தேவை
### Building Construction Company Wanted

யாழ். நகரில் 5 மாடி கட்டடம் ஒன்று நவீன முறையில் அமைப்பதற்கு துறைசார் நன்கு அனுபவமுள்ள நிறுவனங்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:0777 444 407





### வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். பிறவுண் வீதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிக்கக்கூடிய பணிப்பெண் ஒருவர் தேவை.

✓மாத சம்பளம்- 45,000
✓உணவு, தங்குமிடம் இலவசம்.

தொடர்புகளுக்கு
0777 111 444

### வேலையாள் தேவை

யாழ். பிறவுண் வீதியிலுள்ள வீடொன்றிற்கு தங்கியிருந்து துப்பரவு வேலை செய்வதற்கு பையன் ஒருவர் தேவை.

✓மாத சம்பளம்- 40,000
✓உணவு, தங்குமிடம் இலவசம்.

தொடர்புகளுக்கு
0777 111 444


## மரண அறிவித்தல்

### வெற்றிவேல் செல்வரட்ணம் (செல்வம்)



கேசாவில் பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேல் செல்வரட்ணம் (செல்வம்) நேற்று முன்தினம் (24.02.2023) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி, மகேஷ்வரியின் அன்பு மகளும், வெற்றிவேலின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னையா தெய்வானையின் அன்பு மருமகளும், செந்தூர்ராஜன் (ஹலோ ட்ரஸ்ட், முன்னாள் ஊழியர்) சிவப்பிரியா, இவான்சலீன் சாமினா, அஜித்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மபிரியா, ராஜ்மோகன், பிரதீப்குமார், சரணியா ஆகியோரின் மாமியாரும், சுஜித், சஞ்ஜித், வினித், பிறின்சிகா, நிகிதா, விஹாஷ், டிமோஜ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலிகோவில் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
வெ.செந்தூர்ராஜன் (மகன்)
077 086 0434, 077 420 3610

(CR 39323)1-6

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 11 . 1943 — இறப்பு 25 . 02 . 2023



### ஐயம்பிள்ளை கனகலிங்கம்

காரைநகரை பிறப்பிடமாகவும் 15/1, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை கனகலிங்கம் நேற்று (25.02.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரஸ்வதி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, லோகேஸ்வரன், நடராசா மற்றும் பத்மநாதன், பரமேஸ்வரி, வசந்தேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கருணானந்தன், பொன்ராசா, நித்தியானந்தன், புஸ்பலீலாவதி, வாலாம்பிகை அம்பாள், நந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும், சதீஸ்குமார் (சுவிஸ்), சாந்தகுமார் (கனடா), சசிகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயராணி (சுவிஸ்), இலட்சுமிகாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், சுகாதார அமைச்சு) ஆகியோரின் மாமனாரும், அபூர்ணிகா, லோசிகன், கிருதிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

15/1, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு: 077 6320 462

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 07 . 1948 — இறப்பு 25 . 02 . 2023



### நாகலிங்கம் ஜெகதீஸ்வரன்
(ஓய்வு பெற்ற பட வரைஞர்)

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கு, சிவகுல வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஜெகதீஸ்வரன் அவர்கள் நேற்று (25.02.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் சின்னம்மா தம்பதியினரின் செல்வப்புதல்வனும், சரஸ்வதியின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கராசா(ஓய்வுபெற்ற அதிபர்), திலகவதி(மருத்துவ உதவியாளர்), செல்வராணி(ஓய்வுபெற்ற ஆசிரியர்), மலர்தேவி(ஓய்வுபெற்ற ஆசிரியர்), இரவீந்திரராசா(ஓய்வுபெற்ற கணக்காளர்) மற்றும் வத்சலாதேவி(ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்-குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தவக்காலம் செப, தவ, தான நோன்புகளை சிறப்பாக மேற்கொண்டு மனமாற்றம்பெற அழைக்கும் காலமாகும். நோன்பு என்பது உணவைக் குறைந்து உடலை வருத்துவது மட்டுமல்ல, மனதைத் திறந்து, துர்க்குணங்களை சலவை செய்து, இதயத்தூய்மை பெற்று சொல்லிலும் செயலிலும் புனிதம் காப்பதாகும்.

எசாயாவின் காலத்திலும் மக்கள் நோன்பிருந்து, சாக்கு உடை உடுத்தி சட்டங்களைக் கடைபிடித்து வந்தனர். ஆனால் கடைந்தெடுத்த தன்னலம், இலாப நோக்கம், அதிகார ஆதிக்கம், ஏற்றத்தாழ்வு போன்ற முகமூடிகளை அணிந்திருந்தனர். இவ்வாறான வெளிவேட நோன்புகளை இறைவன் வன்மையாகச் சாடுகின்றார்.

கொடுமைத்தழைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிளையல்களை அறுப்பதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்வதும், பசித்தோருக்கு புசிக்கக் கொடுப்பதும், ஏதிலிகளை ஆதரிப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக்கொள்ளாதிருப்பதும்தான் நான் விரும்பும் நோன்பு என இறைவன் நோன்புக்கு புது அர்த்தம் கொடுக்கின்றார். நோன்பைக் கொச்சைப்படுத்தாது அனுசரிப்போம். பிறர்வாழ தன்னையே இழப்பதுதான் உண்மையான நோன்பு. சத்தமில்லா சுபதம் ஏற்று நற்செயல்கள் ஆற்றுவதே நோன்புக்கான சிறந்த இலக்கணம்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை

# நூல் வெளியீடு

தெய்வத்தமிழ்ச்சுடர் இராசையா ஸ்ரீதரன் எழுதிய 'சிறுவர் கதைக்கொத்து' குழந்தைகளுக்கான அறிவுரைக் கதைகள் அடங்கிய பாலர் தமிழ் நூல் வெளியீடு, இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வண்ணை கன்னாதிட்டி காளி அம்பாள் கோயில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது நூலின் முதற்பிரதியை யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் வீ.மகாலிங்கம் பெற்றுக்கொள்ளவுள்ளார். (ம-14)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## இராசையா இராசம்மா

எழுதுமட்டுவாழ் தெற்கினைப் பிறப்பிடமாகவும், வேம்பொடு கேணி பளையை வதிவிடமாகவும், நுணாவில் கிழக்கு சாவகச்சேரியினை தற்காலிக முகவரியாகவும் கொண்ட இராசையா இராசம்மா அவர்கள் கடந்த (24.02.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரஞ்சிதமலர் மற்றும் கணபதிபிள்ளை (லண்டன்), மனோன்மணி, விக்னேஸ்வரி, முருகமூர்த்தி, கணேஸ்வரி (சுவிஸ்), கனேசலட்சுமி, கிருஷ்ணமூர்த்தி (ஜேர்மனி), கிருஷ்ணலட்சுமி, தவலட்சுமி (கனடா), சிவமூர்த்தி (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தாயும், லதா, சந்திரமோகன், கணேசமூர்த்தி, விஜயராணி, பாலச்சந்திரன், கனகதாஸ், கோபிகா, புலேந்திரன், தயாபரன், சுகனியா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சண்முகம், நடராசா மற்றும் மகேஸ்வரி, புவனேஸ்வரி, சர்வானந்தம், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சிவராசா, சிவயோகம் ஆகியோரின் மூத்த சகோதரியும், செங்கையாழியன் - காயத்திரி, கௌசிகா, கயலவன், கிதுர்ஷன், யனுஷன், நிசாந், டயாளினி, கலையரசி, கலையரசன், கலைகுமரன், கலைச்செல்வன், தேனுஜா, கம்சிகா, சர்மிகா, சங்கீத், சர்மிலன், சஜன், டினோஜன், சுரேன், மதுமிதா, அக்ஷரா, டினுஷிகன், அஷ்விகா, நிசான், நிச்சானா, நியானா, அனிக்கா, அட்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆத்விக், புகழ்மாறன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2023) திங்கட்கிழமை மதியம் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.
077 900 6816
077 615 9558

தகவல் : குடும்பத்தினர்

(CR 39324) (3/6)

பிறப்பு 15.03.1947

இறப்பு 24.02.2023

### யாழ். வயல்களில் வைக்கோல் திருட்டு

கோப்பாய், நீர்வேலி உள்ளிட்ட யாழ். குடாநாட்டு பிரதேசங்களிலுள்ள வயல்களில் வைக்கோல் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என செய்கையாளர்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்போக நெற்செய்கை அறுவடைப் பணிகள் தற்போது நிறைவுறும் நிலையில் வயல்களில் வைக்கோல் குவிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. இரவு வேளைகளில் வயல்களுக்குள் நுழையும் சிலர் வைக்கோலை கற்றைகளாக களவாடிச் செல்கின்றனர் என விவசாயிகளால் கூறப்படு கிறது.

கால்நடைத் தீவனத்துக்கு பயன்படுத்தப்படும் வைக்கோலுக்கு தீவுப்பகுதிகளில் பெரும் கிராக்கி உருவாகியுள்ளதுடன் அவற்றின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-17)





### சுருட்டு சுற்றும் தொழிலில் அனுபவமுள்ளவர்கள் தேவை


- சுருட்டு சுற்றும் தொழில் செய்பவர்கள்.
- சுருட்டு சுற்றும் தொழிலில் அனுவமிக்கவர்கள்.
- சுருட்டு சுற்றும் தொழில் தொடர்பில் தொழில் நுட்ப அறிவுள்ளவர்கள்.

மேலும் சுருட்டு சுற்றும் தொழில் அனுமதிப்பத்திரம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு
077 715 7070


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 . 09 . 1941



உதிர்வு 09 . 03 . 2022

அமரர்

## முத்து கணபதிப்பிள்ளை

அவர்களின் விழிநீர் சொரியும் கண்ணீர்ப் பூக்களின் காணிக்கை

அன்புள்ளம் கொண்ட என் ஆசை அப்பாவே!
ஆசையுடன் இன்முகம் காட்டி அரவணைக்கும் தந்தையே
முப்பொழுதும் எம் நினைப்போடு இருந்த ஆசானே!
நேற்றுப்போல் இருக்கின்றது உங்கள் மறைவுச்செய்தி
ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு மறைவதில்லை.
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிவதில்லை
உங்கள் நினைவுகள் ஒழிவதில்லை
மின்னலாய் ஓராண்டு கடந்ததை நம்பமுடியவில்லை
வழியோடு நீரோடு வழிகடந்து செல்கின்றோம்.
தேம்பியழும் எம்நெஞ்சை தேற்றயினி யார்வருவார்
இதயக்கோயிலில் தெய்வமாய் பூசித்து
கண்ணீர் மழை தூவி. அஞ்சலிக்கின்றோம்.

குடும்பத்தினர்.

(GR 33844) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலுக்கு...

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போதுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு தற்காலிகமானது என்றும், அவர்கள் நாடாளுமன்றத்துக்கே பொறுப்புக்கூறவேண்டியவர்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் நிதி தொடர்பான அதிகாரம் நாடாளுமன்றத்துக்குரியது எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து தடையின்றி முன்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியை விடுவிக்கப் பணிக்குமாறு கோரி சபாநாயகருக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (அ-ஒ.5)

## ஊடக...

நடவடிக்கை தவறானது என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கூடியது. வர்த்தமானியில் அறிவித்தவாறு மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலை நடத்தமுடியாது என்றும் மார்ச் 3ஆம் திகதி புதிய திகதி தொடர்பில் ஆணைக்குழு அறிவிக்கும் என்று ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டது.

வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதென்றால், அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களையும் அழைத்து கூட்டம் நடத்தி அதன் பிரகாரம் வர்த்தமானியில் தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பான அறிவித்தலை வெளியிடவேண்டும் என்றும் அதுவே சட்டரீதியானது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-ஒ.5)

## வடக்கு...

கோத்தாபய ராஜபக்ச தெரிவு செய்யப்பட்ட பின்னர், ஒரு லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இந்தத் திட்டத்துக்கு வடக்கு மாகாணத்திலிருந்து அதிகளவானோர் தெரிவு செய்யப்பட்டிருக்கவேண்டிய நிலையில், அப்போதைய ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் தலையீட்டால் குறைந்தளவானோரே தெரிவாகியிருந்தனர்.

இவர்களில் 100 பேர் வரையில் தற்போது வடக்கு மாகாணசபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால், வடக்கு மாகாண சபையில் சிற்றூழியர், தகைசார் பணியாளர் உட்பட சுமார் ஆயிரத்து 200 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களுக்கு, ஏனைய மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களிலிருந்து ஆயிரத்து 100 பேரை நியமிக்குமாறு வடக்கு மாகாணசபையால் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பெருமளவானோர் வேலைவாய்ப்பின்றியுள்ள நிலையில், தென்பகுதியிலிருந்து சிங்களவர்களை இங்கு நியமிக்க முயற்சிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## தேர்தல்...

முடியாது என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச பணியாளர்கள் தேர்தலில் போட்டியிடவேண்டுமாயின் அவர்கள் மூன்று மாத காலம் சம்பளமில்லாத விடுமுறை என்ற அடிப்படையில் சேவையில் இருந்து இடை விலகவேண்டும். அரசமைப்பின் பிரகார்ம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. மார்ச் மாதம் 9 ஆம் திகதி தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டது. தவிர்க்கமுடியாத காரணங்களால் குறித்த திகதியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த முடியாத நிலை காணப்படுகிறது. இவ்வாறான பின்னணியில் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தொடர்பில் தற்போது பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமற்ற விடுமுறையிலுள்ள அரச சேவையாளர்கள் தேர்தல் இடம்பெறும் வரை அரச சேவையில் ஈடுபடமுடியாது. தேர்தல் நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் தான் அவர்கள் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்து, அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள். தவிர்க்க முடியாத காரணங்களினால் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி அறிவிக்கப்படும் - என்றார். (அ-ஒ.இ)

## நீதிமன்ற...

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு யாராவது தடங்கல் ஏற்படுத்தினால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யமுடியும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுக்காலை நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. உள்ளூராட்சித் தேர்தலைப் பேசுபொருளாக்கி சர்ச்சையை உருவாக்கி மக்களுடைய கவனத்தை திசை திருப்புவதற்காகவும் சில முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி சார்பிலும் அவ்வாறான முயற்சிகள் நடைபெற்றாலும் தேர்தல் மிகவும் அத்தியாவசியமான விடயம். ஒரு நாடு ஜனநாயக நாடா? இல்லையா? என்பதை தீர்மானிப்பதற்கு. உரிய காலத்திலே தேர்தல்கள் கிரமமாக நடத்தப்படுவது முக்கியமான ஒரு அம்சமாகும்.

உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன. அது அந்தப்படியே நடத்தப்படவேண்டும். சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. அதற்கு ஏற்ற விதமாக நிதியமைச்சும் ஆரம்ப விடயங்களுக்கென்று 100 மில்லியன் ரூபா பணம் கொடுத்துள்ளது. அதற்கு மேல் எதையும் நிதியமைச்சின் அனுமதி இல்லாமல் கொடுக்கமுடியாது என்று திறைசேரியின் செயலர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருக்கின்றார்.

நிதி அமைச்சராக இருப்பவர் நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதேபோல ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் இருப்பவரும் அவரே. அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் கொழும்பு மாநகர சபையை அண்டிய பகுதிகளில் மும்முரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

எங்களைப் பொறுத்தவரை மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும். அதேபோல ஏற்கனவே அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட்டாகவேண்டும். அதை தேர்தல் ஆணைக்குழு செய்யும் என எதிர்பார்க்கின்றோம். அரச பணியாளர்கள், அமைச்சர்கள், ஏன் ஜனாதிபதியாகக் கூட இருக்கலாம், யாரும் தேர்தலை நடத்துவதை தடுக்கும் செயற்பாட்டுக்கு உதவியாக இருக்கக்கூடாது. தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இணங்கி-ஒத்துழைத்துச் செயற்பட தவறுகின்றமை அரசமைப்பின் 104 (ஜி) (ஜி) (1) பிரிவுக்கு அமைவாக தண்டனைக்குரிய குற்றமாகும். அதைவிட தேர்தலை நடத்துவோம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்துக்கு வாக்குறுதியளித்துள்ள நிலையில் அதனை நிறைவேற்றுவதை தடுக்கும் வகையில் எவராவது செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்படலாம் - என்றார். (அ-ஒ.5,20,26)

## குளத்திலிருந்து...

குளத்தினுள் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ.20,26)

## வீதியில்...

வீதியில் நெல் உலர விடப்படும் நிலையில் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில், புளியம்பொக்கணையிலிருந்து கண்டாவளை நோக்கிப் பயணித்தவர் மீது பரந்தனிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த பாரவூர்தி மோதியுள்ளது. கடந்து சில வாரங்களுக்கு முன்னர் பரந்தன் - பூநகரி வீதியிலும் நெல் உலரவிட்டதன் காரணமாக ஏற்பட்ட விபத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.213)


**காணி விற்பனைக்கு**

இயக்கச்சியில் 48 ஏக்கர் காணி விற்பனைக்கு.
(தரகர் தேவையில்லை)
**Whatsapp: 076 009 3587**

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: **077 209 8826**

**காணி தேவை**

நல்லூர், கச்சேரி நல்லூர் வீதி, கல்வியங்காடு, திருநெல்வேலி மற்றும் இராச பாதை வீதி ஆகிய இடங்களில் 4 பரப்பு காணி உடனடியாக தேவை. உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**076 801 5646**


## மரண அறிவித்தல்

தோற்றம் 21 • 06 • 1946



மறைவு 24 • 02 • 2023

### திருமதி சதாசிவம் இராசமலர்

கோண்டாவில் நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் இராசமலர் 24.02.2023 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் அன்னபூரணம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், இராஜேஸ்வரி, சிவராசா, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், மங்கையக்கரசி, காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், மகேஸ்வரி, நடராஜா, பரராஜசிங்கம், நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், குசலகுமாரி, நவகுமாரி, நந்தகுமார், நவகுமார், நந்தினி, நிமலகுமார், செந்தூர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகரெட்ணம், மோகனதாஸ், விஜயலட்சுமி, சாரதா, பார்த்தீபன், லிந்துஜா, யசினியா ஆகியோரின் அன்பு மாமியாரும், பவிதன், கம்சன், டினுசியா, சங்கீதா, மயூரன், தனுசியா, மோகனலக்ஷன், மதுசோபிகா, யுவலக்ஷி, கர்ணிகா, நவீனா, பகீரா, கஜேந்திரன், தரங்கினி, நிருபன், வினுர்ஷாந், பைரவி, சகானா, ஜனகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ரோகீசன், கர்சினி, டினீசன், ரோசினி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ...ள்ளவும்.

... வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 990 5644

(cs49283) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு.

மூன்று பரப்பாகவும். இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.

K.K.S. வீதியில் இருந்து இரண்டாவது காணி.

தாவடி சந்தியிலிருந்து 100 M தூரத்தில்.

தொடர்பு:- 076 48 54 390
076 43 65 814

(CS 23682)1-6

## வேலை வாய்ப்பு

காட்சியறை ஊழியர் & காசாளர்

வயது 20 - 28 ஆண் / பெண்

தகைமை : A/L + Ms office knowledge

**Salary 30,000 + Incentive**

**SINGER Kilinochchi 077 087 0499**

(CS 22364)(3/6)

## வர்த்தக காணி விற்பனைக்கு

அமைதியான சூழலில் வர்த்தக காணி (8 பரப்பு - அரை ஏக்கர்) 2 கட்டடம் (8500 சதுர அடிக்கு மேல்) மூன்று பக்கம் வீதி கிளிநொச்சியில் விலை பேசித் தீர்மானிக்கப்படும். (CS 22365 (b)(3/6)

**075 806 9246, 074 384 0166**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பால்பண்ணைக்கு 500m தூரத்தில் நன்னீர் ஊற்றுள்ள 2 பரப்பு உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு.

*பலாலி வீதியில் இருந்து 1km

*கம்பஸ் வளாகத்திலிருந்து 50m தூரத்தில்

**077 272 9827,**
**077 668 5097**

(CR39310) 4.6

தனக்குச்...

ஈடுபடும் இராணுவத்தினர் அச்சுவேலிப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

நிலாவரை கிணற்றுக்கு அருகிலுள்ள அரசமரத்துக்கு கீழே திடீரென இரவோடு இரவாக புத்தர் சிலை அமைக்கப்பட்டமையால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் அங்கு விசாரணைகளை முன்னெடுத்தனர். இதன்போதே மேற்கண்டவாறு இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

(அ-ஓ,26)

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்கள் மற்றும் புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவைத் தடுப்பதற்கு உலக தரம் வாய்ந்த இரசாயனப் பொருட்களைக் கொண்டு 10 வருட உத்தரவாதத்துடன் சீர் செய்து தருவோம்.

**போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.** (CS/23702)4,6

**North and East Engineering**
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northand east engineering.com

## வேலைவாய்ப்பு!

**ACCOUNTS ASSISTANT - FEMALE**
**(உதவிக் கணக்காளர் - பெண்கள்)**

**CASHIER - FEMALE**
**(காசாளர் - பெண்கள்)**

**தகைமைகள்:**

- நிதி மற்றும் கணக்கியல் துறையில் தகைமை.
- கணினிமயமாக்கப்பட்ட கணக்கியல் அமைப்பில் அனுபவம்.
- சிறந்த தொடர்பாடல் மற்றும் பகுப்பாய்வுத் திறனுடையவர்.
- குறைந்தபட்சம் 2 வருட அனுபவம் விரும்பத்தக்கது.
- வயதெல்லை 20 - 35

**காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிக்குள் 05 KM சுற்றுச்சூழலில் உள்ளவர்கள் உடனடியாகத் தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.**

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:

ANDRA ADVERTISING (PVT) LTD.
379, Kasthuriyar Road, Jaffna.
0776622981 | 0777481696

## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலியில் தங்கிநின்று குழந்தையைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகள் செய்வதற்கும் நல்லொழுக்கமுடைய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 308 3007**

## விற்பனைக்கு

2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட Discover 125 (BAM - XXXX) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. விலை 300,000/= 63000km பாவித்தது. (CS/23625)4,6

**077 446 8154**

## Hotel Vacancy

- Receptionists
- Cooks
- Accountant

(CS 23669) (3/6)

**076 419 2934**

## வேலைக்கு ஆள் தேவை

வீட்டில் தங்கி நின்று சிறிய வேலைகள் செய்வதற்கு ஆள் தேவை. வேலைநேரம் காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். வயது முக்கியத்துவம் இல்லை. சம்பளம் 25.000 தரப்படும். (CS/23609)4,6

**077 063 3116**

## வேலையாள் தேவை

வாகன உதிரிப்பாக விற்பனையில் முன்அனுபவம் உள்ள ஒருவர் தேவை.

தொடர்பு: **077 179 2577**

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள 17 குளி விஸ்தீரணமுள்ள வீட்டுடன் அமைந்த காணி விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை. (CS 48809) (3/6)

**077 190 9253**

## ICT Classes

தரம் 7 - G.C.E. (A/L) வரையான வகுப்புக்கள் தனியாக / குழுவாக அல்லது Zoom மூலம் பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

➢ G.C.E. (O/L) மாணவர்களிற்கான கடந்த கால வினாவிடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(CS 23671)(3/6)

**T.P : 074 264 0468**

## தேவை

➢ கூலியாட்கள் இருபாலாரும். (ஆண்/பெண்)

➢ தானியங்கள், தேங்காய், கொப்றா தேவை.

தொடர்பு: **077 327 6338**

## NATHISHA CATERING

Vege, None Vege & Sea Food Buriyany, Fried Rice, Noodles, Rice & Curry, Pittu, String Hoppers Kottu or With Curry Iddlee, Dosa (Pepper Dosa Masala Dosa, Nei Dosa, Normal Dosa) Nasi & Kottu, Masala Rotti

**Up to Ten Person Order before 5 Hrs**

**Door Delivery Within 10 km**

**T.P : 077 609 0406** (CS 49261)(3/6)

Suthumalai North, Manipay

## காணி விற்பனைக்கு

நுணாவில் (A9) பிரதான வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 2 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும். (தரகர் தேவையில்லை) மேலதிக விபரங்கள் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். நேரில் சந்திப்பதற்கான நேர ஒழுங்கு மட்டும் T.P தொடர்பாடல் பயன்படுத்தப்படும். உங்கள் பொன்னான நேரத்தை வீணடியாதீர்கள்.

(CS/23674)4,6

**காணி உரிமையாளர்:- 076 690 6272**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா மட்டும்.
- 02 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்

**தொடர்பு: 076 46 50 171**
**076 911 9371**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 54 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரத்தில்.
- புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 KM தூரம்.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காப்பெற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வீதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்

**தொடர்பு: 076 4350 614**
**077 6385 683**

(CS 23656) (A) 1-6

## கணிய முகாமைத்துவம் - கற்கைநெறி

**கிளிநொச்சி பேருந்து நிலையத்துக்கு அண்மையில் M - Tec வளாகத்தில் ஆரம்பமாகவுள்ளது**

A/L பரீட்சையைத் தொடர்ந்து இக் கற்கைநெறியை எத்துறை மாணவர்களும் கற்கலாம். கலை, வணிகம், முகாமைத்துவம், வங்கியியல் கணக்கீடு போன்ற துறைகளில் ஆர்வமுள்ளவர்களுக்கு உகந்த இடைத் தரக் கற்கைநெறி இதுவாகும்.

**ஆரம்பம் :- 01.03.2023 (9.30am)**

**மேலதிக விபரங்களுக்கு 077 66 30793 அல்லது M - Tec கிளிநொச்சியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**077 66 30 793**

**Accountancy, Banking, Management துறைகளுக்கும் படிப்புகளுக்கும் வேண்டிய கற்கைநெறி இதுவாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...த்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

வற்றாத கிணறென்று வாயெல்லாம் புகழ்ந்து
மற்றாரும் பார்க்கவென
குவிந்திடும் நிலாவரையில் — பற்றறுத்த
சத்தமின்றி வந்து குந்தியிருக்க கனவுகண்டால்
புத்தருக்கு புத்தூரில் புக்கைதான் கட்டவேண்டும் காண்!

- மின்மினியாத்தா

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 மாசி 14 ஞாயிற்றுக்கிழமை (26.02.2023) சிகரம் : 138

# மின்வெட்டும் இல்லை தேர்தலும் இல்லை?



நிலாந்தன்

கடந்த 16ஆம் திகதியிலிருந்து மின்வெட்டு நிறுத்தப்பட்டு விட்டது. ஆனால் மின்கட்டணம் 66 விகிதத்தால் அதிகரித்திருக்கிறது. இதன் மூலம் அரசாங்கம் மக்களுக்கு உணர்த்த விரும்புவது எதனை? மின்வெட்டை நிறுத்துவது என்றால் நீங்கள் மின் கட்டண உயர்வைத் தாங்கிக் கொள்ள வேண்டும். இதை அதன் பிரயோக அர்த்தத்தில் கூறின், மின் கட்டணத்தைக் குறைப்பது என்றால் மின்சாரத்தைக் குறைவாக நுகருங்கள் என்பதுதான். இப்படி ஓர் உத்தியைத்தான் எரிபொருள் விநியோகத்திலும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. 'கியூ.ஆர். கோட்' முறைமை என்பது எரிபொருள் நுகர்வைக் கட்டுப்படுத்தியது. எரிபொருள் பதுக்கப்படுவதையும் தேவைக்கும் அதிகமாக நுகரப்படுவதையும் அது ஒப்பீட்டளவில் கட்டுப்படுத்தியது. அதன் விளைவாக வெளியே போகும் டொலரின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. இப்பொழுது மின் கட்டணம் உயர்ந்திருக்கிறது. ஆனால் மின் கட்டண உயர்வினால் அதிகம் பாதிக்கப்படுவது ஏழைகள்தான் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. அதிகளவு மின்சாரத்தை நுகரும் பணக்காரர்களுக்கு ஏற்கனவே கட்டணம் உயர்ந்துவிட்டது. ஆனால் ஒரு குறிப்பிட்ட, வரையறுக்கப்பட்ட மின் அலகுகளைப் பயன்படுத்தும் கீழ் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் இந்தப் புதிய மின் கட்டண உயர்வால் பாதிப்படைவார்கள் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. அரசாங்கம் தந்திரமான முறையில் மானியத்தை வெட்டுகிறது என்றும் எடுத்துக் கொள்ளலாமா?

ஏனெனில் கடந்த இருபதாம் திகதி கண்டியில் உரையாற்றும் பொழுது ஜனாதிபதி அதை வெளிப்படையாக பின்வருமாறு கூறியிருந்தார்...."சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு கடந்த ஒகஸ்ட் மாதம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. அதன்படி, செப்ரெம்பரில் அதிகாரிகள் மட்டத்தில் உடன்பாடு காண முடிந்தது. அவர்கள் எமக்கு நடைமுறைப்படுத்த பதினைந்து விடயங்களைக் முன்வைத்தார்கள். டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன் அவற்றை நடைமுறைப்படுத்த சர்வதேச நாணய நிதியம் கால அவகாசம் வழங்கியது. ஆனால், அன்று அதைச் செய்யமுடியவில்லை. பின்னர் ஜனவரி 31ஆம் திகதி வரை அவகாசம் பெற நடவடிக்கை எடுத்தோம். அப்போதும் அந்த 15 விடயங்களை எங்களால் பூர்த்தி செய்ய முடிய வில்லை. இறுதியாக பெப்ரவரி 15 ஆம் திகதிவரை கால அவகாசம் நீடிக்கப்பட்டது. பெப்ரவரி 15 ஆம் திகதி மாலை 6 மணிக்குள் அனைத்து விடயங்களையும் நிறைவேற்றி வோஷிங்டனுக்கு அனுப்பினோம்..."

அதாவது, ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது அல்லது நிறைவேற்றுவது என்ற ஒரே இலட்சியத்தை நோக்கி அவர் உழைக்கிறார் என்பது அந்த உரையில் தெரிகிறது. ஐ.எம்.எஃப் என்ன கேட்கும்? மானியங்களை வெட்டு; தனியார்மயப்படுத்து; வரிகளைஉயர்த்து; ஆட்குறைப்பைச்செய்...போன்ற விடயங்களைத்தானே? அரசாங்கம் ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியத் தொடங்கிவிட்டது. இதன்மூலம் வரும் மார்ச் மாதமளவில் ஐ.எம்.எஃபிடமிருந்து உதவி கிடைக்கலாம் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. ஆனால் அது ஒரு சிறிய தொகை. அதன் மூலம் கடனை அடைக்க முடியாது. எனினும், அது நாட்டின் கடன் வாங்கும் தகைமையை அங்கீகரிக்கும் ஓர் உதவியாக அமையும். இதை இன்னும் கூரான வார்த்தைகளில் சொன்னால் பிச்சை எடுப்பதற்கான தகைமையை அது அதிகப்படுத்தும்.

**ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது அல்லது நிறைவேற்றுவது என்ற ஒரே இலட்சியத்தை நோக்கி அவர் உழைக்கிறார் என்பது அந்த உரையில் தெரிகிறது. ஐ.எம்.எஃப் என்ன கேட்கும்? மானியங்களை வெட்டு; தனியார்மயப்படுத்து; வரிகளைஉயர்த்து; ஆட்குறைப்பைச்செய்... போன்ற விடயங்களைத்தானே? அரசாங்கம் ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியத் தொடங்கிவிட்டது.**

இவ்வாறு பிச்சை எடுத்து பொருளாதாரத்தை ஒரு கட்டத்துக்கு மேல் நிமிர்த்தி விட்டால், அதன் விளைவாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெறலாம் என்று ரணில் விக்கிரமசிங்க நம்புகிறார். ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு நடத்த வேண்டும். அதனால்தான் உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் பின்னடிக்கின்றதா? வடிவேலுவின் பகிடியில் வருவது போல உள்ளூராட்சிசபைத் தேர்தல் 'வரும் ஆனால் வராது 'என்ற நிலைதான் காணப்படுகிறது. பெரும்பாலும் ஒரு ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. பொருளாதாரத்தை ஓரளவுக்கு நிமிர்த்தினால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை விட்டால் வேறு தெரிவு நாட்டுக்கு இருக்காது. சஜித் பிரேமதாஸ தன்னுடைய தலைமைத்துவத்தை இதுவரையிலும் நிரூபித்திருக்கவில்லை. ஜே.வி.பி. ஒரு பிரதான நீரோட்டக் கட்சியாக மேலெழுமா என்பதனை இனிவரும் தேர்தலே தீர்மானிக்கும். எனினும் பொருளாதாரத்தை நிமிர்த்தும் சக்தி ரணிலுக்கு உண்டு என்று நிரூபிக்கப்பட்டால் அவர்தான் அடுத்த ஜனாதிபதி.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவோடு அவருடைய அதிகாரம் மேலும் கூடியிருக்கிறது. அரசியலமைப்பின் 70(1)அ, உறுப்புரையின்படி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இப்பொழுது அவருக்கு உண்டு. இதை அதன் விளைவுகளின் அடிப்படையில் கூறின், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வகிக்கும் தாமரை மொட்டுக் கட்சி இனி ரணிலுக்கு மேலும் கீழ்ப்படிவாக மாறும். அதாவது ரணில் மேலும் பலமடைந்திருக்கிறார் என்று பொருள். இப்படியாக ரணில், ஒப்பீட்டளவில் பலமடைந்துவரும் ஒரு சூழலில் உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்தினால் அது சில வேளை அரசியல் ஸ்திரத்தன்மை யைக் குழப்பக்கூடும். உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுகள் பெரும்பாலும் தாமரை மொட்டுக் கட்சிக்கு பாதகமாக வரலாம் என்ற எதிர்பார்ப்பு உண்டு. கடந்த பொதுத் தேர்தலில் தாமரை மொட்டுக் கட்சி பெற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை காலாவதியாகிவிட்டது என்பதனை தேர்தல் நிரூபிக்கக்கூடும். அது நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையைக் குழப்பும். அரசியல் ஸ்திரத்தன்மை இல்லையென்றால் பொருளாதாரத்தை நிமிர்ந்துவது கடினம். அரசியல் ஸ்திரத்தன்மை இல்லையென்றால் ஐ.எம்.எஃப் போன்ற மேற்கத்திய நிதி அமைப்புக்கள் உதவப் பின்னடிக்கும். எனவே அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேண வேண்டும். அதற்கு உள்ளூராட்சிசபைத் தேர்தலை வைப்பது புத்தி சாலித்தன மல்ல.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழும். உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் உள்ளூர் நிலைவரங்களைப் பிரதிபலிப்பவை. அவை தேசிய அளவில் கட்சிகளின் வெற்றி தோல்விகளைக் காட்டுமா? என்று. உண்மைதான். உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் உள்ளூரில் காணப்படும் சாதி, சமயம், தனிப்பட்ட செல்வாக்கு போன்ற அம்சங்களைப் பிரதிபலிக் கின்றன. ஆனாலும் இறுதியிலும் இறுதியாக கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகளை தேசிய மட்டத்தில் கணிக்கும்போது அங்கே அது கட்சிகளின் வெற்றி தோல்வியாகவும் வியாக்கியானம் செய்யப்படும்.

இப்படி ஒரு நிலைமை 2015ல் ரணில்+மைத்திரி அரசாங்கம் உருவாகிய பின் ஏற்பட்டது. 2015 தேர்தலில் ரணில்+மைத்திரி கூட்டு வெற்றி பெற்ற பின் நடந்த கூட்டுறவு சபைகளுக்கான தேர்தலில் மஹிந்த அணி வெற்றி பெற்றது. அது உள்ளூர்ப் பண்புமிக்க ஒரு வெற்றிதான். எனினும் அதைக் கண்டு பயந்த ரணில்+மைத்திரி கூட்டு உள்ளூராட்சிசபைத் தேர்தலை கிட்டத்தட்ட 20 மாதங்களுக்கு ஒத்தி வைத்தது. அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்கள் 2018ல் நடந்த போது அதில் மஹிந்த அணி பெரு வெற்றி பெற்றது. அதன் மூலம் ரணில் =மைத்திரி கூட்டு பெற்ற வெற்றி காலாவதியாகிவிட்டது என்பது நிரூபிக்கப்பட்டது. அதன் விளைவாக மைத்திரி தனது விசுவாசத்தை இடம் மாற்றிக் கொண்டார். ஒரு யாப்புச் சதிப்புரட்சியில் ஈடுபட்டார்.

எனவே உள்ளூராட்சித் தேர்தல்கள் உள்ளூர்ப் பண்பு அதிகமுடைய முடிவுகளை வெளிக்கொண்டு வந்தாலும், அவை தேசிய அளவில் கட்சிகளுக்கு உரிய வெற்றி ,தோல்வியாகவே கணிக்கப்பட முடியும். இந்த அடிப்படையில் சிந்தித்தால் தாமரை மொட்டுக்கு மக்கள் ஆணை உண்டா இல்லையா? சஜித்தின் உயரம் எவ்வளவு? ஜே.வி.பியின் உயரம் எவ்வளவு? என்பவற்றை நிரூபிக்கக் கூடிய ஒரு உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயங்கும் என்பதே உண்மை. பதிலாக பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்க அளவுக்கு நிமிர்த்திய பின் அல்லது ஆகக் குறைந்த பட்சம் ஐ.எம்.எஃபிடமிருந்து உதவியைப் பெற்ற பின்பு அதை ஒரு வெற்றியாகக் காட்டி தேர்தல்களை வைப்பது அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதிகம் பாதுகாப்பானது: ஜனாதிபதி ஐ.எம்.எஃப்பிடமிருந்து கிடைக்கக்கூடிய உதவிகளைக் குறித்து கடந்த பல மாதங்களாக கட்டியெழுப்பிவரும் பிம்பமானது அதைத்தான் காட்டுகிறது. அவர் ஒற்றை யானையாக நாடாளுமன்றத்துக்கு வந்தபொழுதே அதாவது ராஜபக்சக்களின் காலத்திலேயே தனது முதல் உரையில் 'ஐ.எம்.எஃப்பிடம் போங்கள்' என்று சொன்னார். இப்பொழுதும் அதைத்தான் சொல்கிறார்; செய்கிறார். ஐ.எம்.எஃப்பை ஒரு சர்வரோக நிவாரணியாக அவர் உருவகித்து வருகிறார். அதன்மூலம் ஐ.எம்.எஃப்பிடமிருந்து உதவிகளை வெற்றிகரமாகப் பெற முடிந்தால் அதை ஒரு சாதனையாகக் காட்டி அவர் வாக்குகளைத் திரட்ட முயற்சிக்கலாம். ஆனால் இங்குள்ள கேள்வி என்னவென்றால், ஜனாதிபதி எதிர்பார்ப்பது போல அடுத்த ஆண்டுக்குள் பொருளாதாரத்தை ஓரளவுக்குச் சரிக்கட்டலாமா என்பதுதான். ஏனெனில், இலங்கையைப் போன்று பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்த கிரேக்கத்தில் ஐந்து ஆண்டுகளுக்குள் ஏழு தடவைகள் அரசாங்கம் மாறியது. ஆர்ஜென்டினாவில் ஐந்து தடவைகள் அரசாங்கம் மாறியது. ஐந்து தடவைகள் நிதியமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள். இலங்கையில்.............. ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

# குர்திஸ்தான் மக்களும் புலம்பெயர் தமிழர்களும்

அ.நிக்ஸன்

ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் இராணுவ ரீதியில் அதி உச்சத் தொடர் வெற்றிகளைக் கண்டுகொண்டிருந்த பின்னணியிலேதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 2001 இல் உருவாக்கப்பட்டது. இன விடுதலைக்கான போராட்ட அரசியல் என்பது தனித்து இயங்கும் ஒன்று அல்ல. எந்தவொரு போராட்டத்துக்கும் அரசியற் காரண, காரியங்கள் உண்டு. இராணுவ ரீதிலான போராட்டத்தின் வெற்றி ஒரு கட்டத்தை மேம்படுத்தும் போது, அதற்கு அடுத்த கட்டமாக அரசியல் ரீதியான, அதுவும் ஜனநாயக விழுமியங்களைப் பேணக் கூடிய, நெறி முறைகளை நுட்பமாகக் கையாள வேண்டியது அவசியமானது. அதனை மையமாகக் கொண்டே விடுதலைப் புலிகள் 2001 இல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்துக்கான சமிக்ஞையைக் கொடுத்தனர்.



ஏனைய இயக்கங்களின் விடுதலை அரசியல் பாதை 1986 இல் இலக்குமாறுவதாக உணரப்பட்ட சூழலிலேயே சகோதரப் படுகொலைகள் என்று விமர்சிக்கப்ப டும் அளவுக்கு அது உள்ளக மோதலாக மாறியது. இருந்தாலும் அந்த மனக்குரோதங்கள் , வலிகள் என்பவற்றைக் கடந்து, ஒருமித்த குரலாக மையம் கொண்டு தமிழ்த்தேசியக் கோட்பாட்டை மனதார ஏற்றுக் கொள்ளும் நியாயபூர்வமான அரசியல் பின்னணி 2001 இல் உருவானது. இந்தப் புரிதல்தான் உண்மையான இன விடுதலை அரசியல். 1980 களில் இந்தியப் பெருந்தேசியச் சிந்தனையின் ஊடுருவல் வடக்கு- கிழக்கில் இயக்கங்கள் மத்தியில் உள்ளக மோதலை உருவாக்கியது.

2009 க்குப் பின்னரான சூழலில் மேலும் பலருடைய மனட்சாட்சிக்கு இந்தியப் பெருந்தேசியத்தின் அப்போதைய காரண, காரியங்கள் நன்கு புரிந்திருக்கும். ஆனால் 1986 இல் நடந்த சகோதரப் படுகொலைகள், கம்பராமாயணத்தில் வரும் சகோதாரர்கள் ஒவ்வொருவரும், தத்தமது ஆட்சிக்காக வகுத்த சூழ்ச்சி - வஞ்சகம் போன்றதல்ல. மாறாக வல்லரசுகள், தமது புவிசார் அரசியல் பொருளாதாரத்தை மையப்படுத்திய பெருந்தேசிய விஸ்தரிப்புக்கு வசதியாகத் தமிழ் விடுதலை இயக்கங்களை தூண்டி விட்டமை பட்டவர்த்தனம். இதனை 2009 மே மாதத்துக்குப் பின்னரான வல்லரசுகளின் வடக்கு - கிழக்குத் தாயகத்தை மையப்படுத்திய இந்தோ - பசுபிக் பிராந்திய புவிசார் அரசியல் - பொருளாதாரப் போட்டிகள் நிறுவுகின்றன.

2001 இல் முன்னாள் இயக்கங்களை உள்ளடக்கி அதுவும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் இணைத்துத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணைத்துக் கையாண்ட அரசியல் நுட்பம் வள்ளுவன் வகுத்த நெறியில் அமைந்தது.

"அரசியல் விடுதலைப் போராட்டத்தை ஜனநாயக விழுமியங்களுடன் சர்வதேச அரங்கில் நியாயப்படுத்தி அங்கீகாரத்தைப் பெறுவதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம்" என்ற தொனியில் சம்பந்தன், கொழும்பில் 2001 நவம்பரில் இடம்பெற்ற கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில் விளக்கமளித்திருந்தார். வள்ளுவர் முடியாட்சியை ஏற்றுக்கொள்கிறார். ஆனால் அந்த முடியாட்சியில் குறுக்கீடுகள் இல்லாத ஒற்றை அதிகாரத்தை வள்ளுவர் ஏற்கவில்லை. ஒரு சமூகத்துக்கு அரசியல் அறம் உரித்தாக வேண்டுமானால், சில தியாகங்களைச் செய்தாக வேண்டும் என்பது போராட்ட விதி. அதன்படி ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் சமூகம் உருவாகி, அதற்குரிய இராணுவப் பலமும் நிரூபிக்கப்பட்ட பின்னர் பங்கேற்பு ஜனநாயகம் அவசியமானது. அதனை வள்ளுவர் முன் நிறுத்துகிறார். அதற்கேற்பவே 2001 இல் கூட்டமைப்பு உருவானது என்றால் அதனை எவரும் மறுப்பதற்கில்லை.

*'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்'*

என்ற குறள் மூலம் பிறப்பில் உரிமைகள் அனைவருக்கும் சமம் என்ற அரசியல் நெறியை வள்ளுவர் உலகத்துக்கு அறிமுகம் செய்கிறார். பிறப்பில் சாதி, பணக்காரன், ஏழை என்ற பேதமைகள் இல்லை என்பதை வலியுறுத்தும் வள்ளுவர், முடியாட்சியை ஏற்றுக்கொள்கிறார். ஆனால் அந்த முடியாட்சி யில்தான் குறுக்கீடுகள் இல்லாத ஒற்றை அதிகாரத்தை வள்ளுவர் புறம் தள்ளுகிறார்.

ஆகவே போராட்டத்துக்கான சர்வதேச அங்கீகாரத்துக்காக ஒரு அரசற்ற இனமொன்றின் தலைவனால், அரசியல் ரீதியான அடுத்த கட்ட நகர்வுக்காகக் குறைந்தபட்சம், தன் சமூகத்தில் இருக்கின்ற மிதவாத அரசியல் பிரதிநிதிகளையும் முன்னாள் இயக்கங்களையும் இணைக்கத்தான் முடியும்.

இந்த இடத்திலேதான் 1986 இல் நடந்த சகோதரப் படுகொலைகளுக்குப் பின்னரான, ஒரு குடையின் கீழான ஆயுதப் போராட்டமும், 2001 இல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் தமிழ்த்தேசியத்துக்கு அவசியமான ஜனநாயக விரிவாக்கமும் வள்ளுவன் வகுத்த அரசியல் ஒழுக்கத்தை உணர்த்தியிருந்தன.

அரிஸ்டோட்டில் போன்ற அரசியல் அறிஞர்கள், மன்னனின் அதிகாரத்துக்கு அரண் செய்யும் வகையிலேயே நெறிகளை வகுத்தனர். கௌடில்யர் படைத்த அர்த்தசாத்திரமும் அவ்வாறுதான் வகுக்கப்பட்டிருந்தது. மக்கள் உரிமைகளைக் கூட இவர்கள் இருவரும் உறுதிப்படுத்தவில்லை. இனப் பிரிவுகளை வகுத்து அதன் ஊடே வெவ்வேறுபட்ட உரிமைகளை

## 2001 இல் வள்ளுவன் நெறிப்படி உருவான கூட்டமைப்பு

## 2009 க்குப் பின்னர் பெருந்தேசியத்துக்குள் சிதைந்தது!

மாத்திரமே வழங்கினர். மக்களுக்கு அடிமை வாழ்க்கையையே வழங்கினர்.

ஆனால் வள்ளுவர் அடிமை வகுப்பு வாழ்க்கையை ஒப்புக்கொள்ளவில்லை. தடையில்லாத அதிகாரத்தை வள்ளுவர் மன்னனுக்கு வழங்குகிறார். சங்க காலத்தில் வாழ்ந்த தமிழறிஞர்கள் தமிழக அரசர்களுக்கு அவ்வப்போது எடுத்துக்கூறிய அறிவுரைகள் இலக்கியங்கள் மூலமாகவே அமைந்திருந்தன. அந்த அறிவுரை வழியாக வந்த சிறப்புடை மரபுகள் ஊடே நல்லாட்சி நடந்தது. இதனைக் குன்றக் குடி அடிகளார் 'வள்ளுவரின் அரசியல்' என்ற சொற்பொழிவில் மேலும் விரிவாகச் சித்திரிக்கிறார். ஒரு போராட்டத்தின் வெற்றி - தோல்வி ஏனைய போராட்டங்களிலும் செல்வாக்குச் செலுத்துகிறது. இலங்கை அரசு 2009 இல் ஈழப் போரை இல்லாதொழித்த வழிமுறையைத் தாம் பின்பற்றப் போவதாக துருக்கிய ஜனாதிபதி எர்டகோன் அறிவித்திருக்கிறார். தமிழர்களுக்கு நடந்த பேரழிவு, குர்திஸ்தான் இனப் போராளிகளுக்கும் மக்களுக்கும் இன்று வரை பின்னடைவுதான்.

தமிழர்கள் போன்று குர்திஸ்தான் மக்களும் புலம்பெயர்ந்து சுவீடன், பின்லாந்து நாடுகளில் வாழுகின்றனர். நிரந்தப் பிராஜவுரிமையுடன் வாழும் குர்திஸ்தான் மக்களுக்குத் தற்போது புதுப் பிரச்சினை ஒன்று ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவை மையப்படுத்திய நேட்டோ இராணுவ அணியில் இணைய சுவீடன் - பின்லாந்து ஆகிய இரு நாடுகளும் விருப்பம் தெரிவித்ததால், நேட்டோவில் அங்கம் வகிக்கும் துருக்கி, சுவீடன் - பின்லாந்து அரசுகளுக்கு ஒரு நிபந்தனை விதித்துள்ளது. அதாவது இந்த நாடுகளில் அகதித் தஞ்சம் கோரியுள்ள குர்திஸ்தான் மக்களை மீண்டும் துருக்கிக்கு அனுப்ப வேண்டுமென்பதே அந்த நிபந்தனை. நேட்டோ அணியில் ஒரு நாடு இணைய வேண்டுமானால், அதில் அங்கம் வகுக்கும் ஒரு நாடு விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுச் செயற்படுத்த வேண்டும் என்பது அவர்கள் வகுத்திருக்கும் அரசியல் ஒழுக்கம்.

ஜூன் 28, 2022 அன்று ஸ்பெயினில் நடந்த மாநாட்டில் இரு நாடுகளையும் நேட்டோவில் இணைப்பதற்குத் தமது நிபந்தனைகளுக்கு ஏற்ப துருக்கி ஒப்பமிட்டுள்ளது. இதனால் குர்திஸ்தான் மக்களை நாடு கடத்தும் பணியை சுவீடன் ஒரு மாதத்துக்கு முன்னர் ஆரம்பித்துள்ளது. குர்திஸ்தான் போராளிகள் அங்கு தஞ்சமடைந்துள்ளனர் என்பதே துருக்கியின் உண்மைக்கு மாறான குற்றச்சாட்டு.

ஆகவே இதுதான் புவிசார் அரசியல். இந்த அணுகுமுறையைத் தான் இலங்கை அரசும் 2009 இல் இருந்து பின்பற்றி வருகின்றது. இலங்கைத்தீவில் தமக்குரிய புவிசார் அரசியல் தேவைகளை நிறைவேற்ற, வடக்கு- கிழக்கு இணைந்த தமிழ் பேசும் மக்களின் தாயகக் கோட்பாட்டை நிராகரித்து, இலங்கை ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழர்கள் வாழ்வதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் அமெரிக்க = இந்திய அரசுகள் நிறைவேற்றி வருகின்றன.

தமது புவிசார் அரசியலுக்குத் தேவையான முறையில் இலங்கையுடன் 'அரசுக்கு அரசு' என்ற இராஜதந்திர அணுகுமுறையில் அரசியல் விடுதலை வேண்டி நிற்கின்ற ஈழத்தமிழர்கள் பற்றி அமெரிக்க - இந்திய அரசுகளுக்குக் கவலை இல்லை என்பதையே, 2012 ஆம் ஆண்டில் இருந்து ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டு வரும் இலங்கை பற்றிய தீர்மானங்களும் சுட்டி நிற்கின்றன.

எனவே சுவீடனில் இருந்து தற்போது குர்திஸ்தான் மக்கள் வெளியேற்றப்பட்டு வரும் ஆபத்தான நிலைமை புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் ஏற்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஆகவே உண்மையான அரசியல் அறம் உலகில் இல்லை என்பது புரிகிறதல்லவா?

அரிஸ்டோட்டல், கௌடில்யர் ஆகியோர் வகுத்த மன்னருக்கான முடியாட்சித் தன்மை கொண்ட அரசியல் அறம் தான் இன்று உலகில் ஜனநாயகம் என்ற பெயரில் வல்லரசுகளினால் அரங்கேற்றப்படுகின்றன.

இந்தப் புவிசார் அரசியல் தந்திரோபாயங்களை முன் கூட்டி அறிந்தே 1986 இல் தமிழ்த்தேசிய நாகரிகம், ஒரு நிலைப்பட்ட கொள்கை என்ற தெரிவை உள்வாங்கிக் கொண்டது. ஆனாலும் வள்ளுவ நெறிப்படி பன்முகத்தன்மை கொண்ட அரசியல் நெறிக்கு 2001 இல் வழி திறந்து விடப்பட்டது. அதன் வகிபாகத்துக்கு அப்போது புளொட், ஈ.பி.டி.பி தவிர்ந்த அனைத்து இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் கூட்டு ஒத்துழைப்பை நல்கியிருந்தன. இருந்தாலும் 1986 இல் நடந்த சகோதரப் படுகொலை என்ற கசப்பான உண்மைகளை மறக்க முடியாது.

மாற்றுக் கொள்கை என்ற பெயரில் இலங்கை அரசு - இலங்கை இராணுவம் மற்றும் அமெரிக்க - இந்திய அரசுகள் என்ற எதிர்நிலைப் பக்கங்களில் நின்று 2009 மே மாதம் வரையும் போரை இல்லாதொழிப்பதற்குத் துணைபோன காரியங்களும் ஏராளம்.

கம்பராமாயணக் கதையில் வரும் சகோதரப் படுகொலைகளை அரசியல் அறம் என்று வாதிடும் சில அறிஞர்கள், தமிழர்களின் முப்பது வருட ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திச் சகோதரப் படுகொலைகளையும், 2009 இல் தமிழ்த்தேசியம் விட்ட தவறு எனவும் இட்டுக்கட்டி நிரப்பி பெருந்தேசியவாதத்துக்கு ஒத்துழைக்கின்றனர்.

இந்தப் பின்புலத்திலேதான் 2001 இல் இராணுவ மற்றும் ஒருமித்த குரல் பலத்தின் மூலம் ஜனநாயக விழுமிய நோக்கில் தோற்றுவிக்கப்பட்ட பன்முகத் தன்மையுடைய தமிழ்த் தேசிய அரசியல் நாகரிகத்தை, 2009 க்குப் பின்னரான சூழலில் தமிழ்த்தேசியக் கட்சிகள், பெரும்தேசியவாதத் தேவைக்கு ஏற்ப மாற்றிக் கொண்டனரென அர்த்தம் கொள்ள முடியும்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ சுழியன்

# அறிந்தும் அறியாமலும்



## போராட்டம்

உள்ளாட்சிசபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசு முயற்சித்துவருகின்றது எனப் பரவலாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், அரசாங்கத்தின் இந்த முயற்சியைத் தோற்கடித்து தேர்தலை நடத்துவதற்கு எதிரணிகள் போராடிவருகின்றன. இந்தநிலையில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கும் இடையில் தொலைபேசி வாயிலாக முக்கியமான கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளதாம். அரசாங்கம் தேர்தலைப் பிற்போட்டால், மேற்கொள்ளப்பட வேண்டிய நகர்வுகள் சம்பந்தமாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன. அவ்வேளையில் இணைந்து போராடுவதற்கு முன்வருமாறு அநுரவுக்கு, ரஞ்சித் மத்தும பண்டார அழைப்பு விடுத்தார்.

இதனை ஏற்க மறுத்த அநுர, " உங்களுடன் இணைந்து எங்களால் பேரணி நடத்த முடியாது. நீங்கள் உங்கள் வழியில் நடத்துங்கள். நாங்கள் எங்கள் வழியில் பயணிக்கின்றோம். மக்களுக்காக பொதுவானதொரு இடத்தில் ஒன்றிணைவோம்" எனப் பதிலளித்துள்ளாராம். இதற்கமைய இவ்விரு கட்சிகளும் தேர்தலைக்கோரி தனித்தனியே போராட்டங்களை நடத்துமெனவும், அதன்பின்னர் தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் எல்லாம் இணைந்து கூட்டுப் போராட்டத்தை நடத்தக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



## பகிடி

காதலர் தினமான கடந்த 14 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஒன்றுகூடி விருந்து வைத்து, ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மொட்டு கட்சி எம்.பிக்கள் இதன்போது இருந்துள்ளனர்.

அரசியல் பற்றியும் குறித்த 'பார்ட்டி'யின்போது நகைச்சுவை கலந்த பாணியில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன்போது 2024 இல் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் யாரென மொட்டு கட்சி எம்.பி.யொருவர் வினவியுள்ளார். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யொருவர் 'சஜித் தான்' என்று பதில் கூறியுள்ளார்.

'இல்லை, இல்லை, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்கதான் 2024 இல் பொது வேட்பாளராக வருவார், அதற்கான களத்தை அவர் உருவாக்கி, சிறப்பாக அடித்தாடி வருகின்றார். அவருக்கு நீங்கள் எல்லாம் சுதந்திரமாக இடமளித்துள்ளீர்கள். அவரின் வீட்டுத் திட்டத்தில் பல எம்.பி.க்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன வாமே....' என சிரித்தபடியே கூறியுள்ளா ராம் மொட்டுக்கட்சி எம்.பி .



## முடிவு

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் நிச்சயம் போட்டியிடுவேன். அதில் வெற்றியும் பெறுவேன். எனது இந்த அறிவிப்பின் உண்மையை விரைவில் உணர்வீர்கள்."
இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம கட்சி தலைவரான மைத்திரிபால சிறிசேன தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

" ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன்" என மைத்திரி விடுத்திருந்த அறிவிப்புத் தொடர்பில மத்திய குழு உறுப்பினர்கள் சிலர் இதன்போது கேள்விகளை எழுப்பியுள்ளனர். இந்த அறிவிப்பின் நோக்கம் என்னவெனவும் வினா தொடுத்துள்ளனர். இதற்கு பதிலளித்த மைத்திரி, 'தேர்தலில் களமிறங்க எனக்கு அரசியலமைப்பு ரீதியில் எவ்விதத் தடையும் இல்லை. கட்சிக்குள் எதிர்ப்பும் இல்லை. எல்லாம் தெரிந்துதான் இந்த அறிவிப்பை விடுத்தேன். நான் போட்டியிடுவது உங்களுக்கு பிரச்சினையா?' எனக் கேட்டுள்ளார். இதற்கு 'இல்லை'எனக்கூறி அந்த விடயத்துக்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைத்தனராம் மத்திய குழு உறுப்பினர்கள்.



## குழப்பம்

உள்ளாட்சிமன்றத் தேர்தலை குறைந்தபட்சம் 6 மாதங்களுக்காவது ஒத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம். அமைச்சர்கள் சிலரும், சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். தேர்தலொன்று நடைபெற்றால் அரசுக்கு ஏற்படும் நெருக்கடி நிலைமைகள் குறித்தும், அதன் பின்னரான நகர்வுகள் சம்பந்தமாகவும் அவர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது விடயம் தொடர்பில் ஜனாதிபதி தரப்பில் இருந்து உறுதியான பதில் எதுவும் வழங்கப்படவில்லையெனத் தெரியவருகின்றது.

அதேவேளை, தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் முற்படுமானால், தேர்தலை நடத்தி ஏற்படும் தாக்கத்தை விடவும், அது பாரதூரமான சிக்கலைத் தோற்றுவிக்கும் என ஜனாதிபதிக்கு நெருக்கமான சில ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனராம். இதனால் என்ன செய்வதென்று தெரியாமல் குழப்பத்தில் உள்ளா ராம் ரணில்.

○ கோகுலராகவன்

# மொழியை கொல்லுதல்

பிள்ளை றேடியோவைப் போடு"
என்றால் 1980 களுக்கு முன்னர் ஒரே ஒரு வானொலி அலைவரிசைதான். அலைவரிசை மாற்றப்படாமல் அதிலேயே இருக்கும்.
போட்டால் உடனே பாட்டோ, செய்தியோ கேட்கத் தொடங்கும.

றேடியோவுக்கும் எமக்குமான உறவு நிலை பேறானதாக இருந்தது. பால்குடித்து வளர்ந்தோம் என்பதை விட றேடியோவில் பாட்டுக் கேட்டு வளர்ந்தோம் என்பதே உண்மை.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை பாட்டை மட்டுமே வழங்கிக் கொண்டிருக்கவில்லை. சுவாரசியமான பல்வேறு நிகழ்ச்சிகளையும் அது வழங்கவே செய்தது. நாட்டின் செய்தி, மூன்று தடவை வழங்கப்படும். இதிலே செய்தியின் பின்னணி என்ற நிகழ்ச்சி , செய்திகளின் உண்மைத் தன்னமையை அலசி ஆராயும் ஒரு நிகழ்ச்சி.

நாடகங்கள் விரும்பிக் கேட்போம்.

வரணியூரான் என்கிற எஸ்.எஸ்.கணேசபிள்ளையின் 'இரை தேடும் பறவைகள்' என்ற நாடகம் ஆயிரக்கணக்கான இரசிகர்களால் விரும்பிக் கேட்கப்பட்ட நாடகம்.

இன்னும் இசையும் கதையும், சினிமா ஒலிச்சித்திரம் . முகத்தார் வீடு என்கிற விவசாய நிகழ்ச்சி இவ்வாறு பல நிகழ்ச்சிகள். இதில் பங்குபற்றிய கலைஞர்கள் அனைவரும் எப்போதும் தூய, தெளிவான தமிழ் உச்சரிப்பை வழங்கினர்.கொச்சையாகப் பேசுவது கிடையாது . யாழ்ப்பாண பேச்சுத்தமிழ் நாடகங்களில் மட்டும் பயன்படுத்தப்பட்டது.

இலங்கையில் தூய தமிழ்ப் பிரயோகத்தை ஊக்குவித்ததில் இலங்கை தமிழ் வானொலிக்குரிய இடம் முதன்மையானது. அன்றைய அறிவிப்பாளர்கள் , நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் தமிழ்மொழியில் புலமை மிக்கவர்களாக இருந்ததே இதற்கு முக்கிய காரணம்.

மிகத் தெளிவான தமிழ் உச்சரிப்பு அனைத்து அறிவிப்பாளர்களால் பின்பற்றப்பட்டது.

இது யாழ்ப்பாணத் தமிழ் ஏற்கனவே தூய உச்சரிப்புக்காக கொண்டாடப்பட்டதை மேலும் உறுதிப்படுத்தியது.



## இருந்து கதைப்பம்

திருமுருக கிருபானந்த வாரியார் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்த போது அவரிடம் யாழ்ப்பாண உதவியாளர்.

"ஐயா தோய்ஞ்சிட்டியளோ? சாப்பாடு தரவோ ?"

என்று கேட்டிருக்கிறார்.

அவருக்கு தோய்தல் என்கிற வினைச்சொல்லின் அர்த்தம் முதலில் புரியவில்லை . விளக்கம் கேட்டிருக்கிறார்.

அது புரிந்த பின் மிகவும் ஆச்சரியப்பட்டு இப்படிச் சொன்னராம்.

"தலை குளித்தலின் தூய தமிழ் வடிவம் தோய்தல் என்பதே மிகச்சரி "

இன்றும் தூய தமிழைக் கேட்க மலையாளம் , அல்லது யாழ்ப்பாணம் போக வேண்டும் என்கிற கருத்து பொதுவாக உள்ளது.

மலையாளம் ஆதித்தமிழில் இருந்து உருவாகியதால் அது பழைய பிரயோகக் தமிழை இப்போதும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. சொற்களை குறுக்கி உச்சரிக்கும் வழக்கம் மலையாளத்திலோ,யாழ்ப்பாணத்திலோ இல்லை.

ஆங்கிலச் சொற்களை தமிழாக மாற்றும் தன்மையும் பெரும்பாலும் இல்லை.


"பாத் றூம் ஷவரில வோட்டர் லீக்காகுது "

இது இந்திய நாடகம் ஒன்றில் கேட்ட வசனம். இது என்ன மொழி?

தமிழில் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு வழக்கு மொழி உருவாவதுக்குரிய காரணம் நமது உச்சரிப்புத் தவறாகவே கருத முடியும். மொழியின் திரிபுகள் தர்க்க ரீதியாக உருவாக லாம். ஆனால் நாமாக ஒரு சொல்லின் வடிவத்தை தவறாக உச்சரிப்பது அவ்வளவாக உவப்பான செயல் அல்ல.

இந்த இடத்தில் தற்கால தனியார் வானொலிகளின் அறிவிப்பாளர்களின் மொழிப்பிரயோகங்கள் தவறான வழக்குகளை உட்படுத்தத் தலைப்படுவதாக தோன்றுகிறது. இதை அவர்கள் நாகரிகமாகவும் கருதுகின்றனர் என்பதுதான் ஆகப்பெரிய வேதனை. நேயர்களுடன் உரையாடும்போது அவர்களது மொழிப்பிரயோகம் எரிச்சலையே தருகின்றது.

சொல்லுங்க
கேளுங்க
பேசுங்க.
இருங்க
தாங்க
பாடுங்க
நாம
நீங்க
அவங்க
ஆமா இப்போ என்ன
பண்ணிட்டிருக்கீங்க?



- இப்படி பல. அனேகமாக இந்தக் குறைப்பதச் சொற்கள் தென்னிந்தியாவின் சென்னைத் தமிழின் வழியாக வந்தவை.

இலங்கை தனியார் வானொலி அறிவிப்பாளர்கள் அநேகமானவர்கள் யாழ்ப்பாணத்தை அண்டியவர்கள்.

'இவர்கள் ஏன் சென்னைக்கான மொழியைப் பயன்படுத்துகிறார்கள்? ' என்பது கேள்விக்குறியாக உள்ளது.

அண்மையில் ஒரு தொலைக்காட்சியில் இதே வார்த்தைகளில் நேர்முகம் ஒன்று நிகழ்ந்தது. நேர்காணலுக்கு வந்த அதிதியின் பேச்சு மொழிக்காக அறிவிப்பாளர் தன் பேசும் மொழியை அவரது பேச்சு மொழி போல மாற்றிக்கொண்டார்.

வந்தவரோ அதற்காக இவரைப் புகழ்ந்து தள்ளினார்.

இதை என்னவென்பது? எமது தாய்மொழியை விட்டுக்கொடுப்பது பொருத்தமானதாக அமையாது. இலங்கை தனியார் வானொலிகள் மிகவும் தாக்கமானவை. அவை மொழியை வளர்க்க ஆவன செய்ய வேண்டுமே தவிர கொல்லக்கூடாது.

(இன்னும் கதைப்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந் தேசம்




சுனெர பண்டார

(சட்டமாணி. சர்வதேச மனித உ... சட்டம், சமகால நடப்புகள், புவிசார் ... புலனாய்வு ஊடகத்துறை மற்றும் ஆவ... தயாரிப்பில் ஆர்வமுள்ளவர்)

> இராணுவம் தமது அளப்பரிய புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து மக்களை நம்ப வைக்க பெரியளவில் நேரத்தை செலவிட்டது. அப்படியான எண்ணங்கள் கூறப்பட்டாலும், யதார்த்தத்தில் எம்மால் அப்படியான புனர்வாழ்வு நடவடிக்கைகள் எதையும் காண முடியவில்லை.

கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிய எனது இரண்டு நாள் பயணம் மிகவும் அலுப்பாகவும் எனது கண்களைத் திறப்பாக வும் இருந்தது. வலி சுமந்த பெரிய விடயங்களை பெரும் வேதனையின் மூலமே உணர முடியும் எனக் கூறினாலும், எந்தச் சூழ்நிலையும் அதன் தீமைகள் இல்லாமல் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

உள்நாட்டுப் போர் முடிந்த பிறகு, நாட்டின் வடக்கில் என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள வடக்கு நோக்கிய பயணத்தின் போது, இராணுவமயப்படுத்தப்பட்ட ஒரு சூழல் எப்படியிருக்கும் எனக் கூறப்பட்டதோ அதைப் போன்று இருந்தது.

நாங்கள் செல்ல வேண்டிய இடத்தை அடைவதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஏனென்றால் அங்கு நேராகச் செல்வதற்கான ஒரு பாதையாக அந்த வழி இருந்தது. இடையே அனுராதபுரம் வழியாகச் செல்லும் போது அங்குள்ள புகழ்பெற்ற விகாரையில் சற்று நின்று புகைப்படங்கள் எடுத்துக்கொண்ட பின்னர், ஒரு சாத்திரக்காரன் கூறியதற்கு மாறாக எமது பயணம் சிக்கல் இல்லாமல் இருந்தது. எனினும் வவுனியாவுக்கு வருவது எதிர்பாராதவிதமாக வித்தியாசமாக இருந்தது.

வடக்குக்கான எங்கள் பயணத்தை விபரிக்க வேண்டுமென்றால் நான் அதை குறிப்பாகச் சுட்டிக்காட்ட வேண்டும். சர்வதேசத்தின் பார்வையில் வடக்கு- தெற்குப் பிளவு என்பது வெளிப்படையாகத் தெரியாத ஒரு கற்பனையாகவே இருக்கிறது. ஆனால் அது உடல் மற்றும் உளரீதியில் உண்மையே.

தெற்கு மாகாணங்களைவிட வடக்கு முற்றிலும் மாறான ஒரு பிரதேசம். நான் ஏதோ மிகைப்படுத்திச் சொல்கிறேன் என நீங்கள் கருதலாம் ஆகவே தயவு செய்து தொடர்ந்து வாசியுங்கள்.

வவுனியாவில், ஈர்க்கும் வகையிலான கவலை என்பது இடிபாடுகள் மட்டுமின்றி, வடக்கில் பொதுமக்களிடையே ஒருங்கிணைப்பு இன்மையும், அங்கு தெளிவாக தமது எல்லைகளை மீறும் வகையிலும் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தின் மத்தியில் அவர்கள் நடமாட வேண்டியுள்ளது. வலிந்த இராணுவமயமாக்கலே அங்கு ஒருங்கிணைப்பை கொண்டுவர முடியும் என்கிற நம்பிக்கை அதற்கான காரணமாக இருக்கலாம். அங்கு ஒருங்கிணைப்பு இல்லாததால் இந்த நிலை இல்லை, மாறாக அன்றாட வாழ்வில் ஒவ்வொரு அம்சத்தின் மீதான அவ நம்பிக்கை காரணமாகவே இந்த நிலை உள்ளது.

வவுனியா பேருந்து நிலையம் குப்பைகள் நிறைந்து காணப்படுகிறது. அதற்கு நேர் எதிராக இராணுவ அதிகாரி ஒருவரின் சிலை இருந்தது. ஆனால் மக்களோ தமக்கும் அதற்கும் தொடர்பில்லை என்ற வகையில் வானிலுள்ள மேகங்கள் போல் கடந்து சென்றனர். அது தான் வவுனியா.

முல்லைத்தீவை அடைந்தவுடன் இராணுவக் கட்டமைப்புகள் மேலும் தெளிவாகத் தெரிந்தன. அவற்றைச் சுட்டிக்காட்டுவதே ஒரு வேலையாகப் போய்விட்டது என்பதே உண்மை. வடக்கில் இராணுவப் பிரசன்னம் பற்றி அறிந்திருந்த நான் அது ஒரு கேலிச்சித்திரத்தில் வருவது போன்று சில இராணுவத்தினர் முகாம்களில் மட்டுமே இருப்பார்கள் என்பதாகவே எனக்குள்ளிருந்தது. வன்னியில் பரந்து விரிந்திருக்கும் இராணுவ முகாம்களை நீங்கள் காணும் போது உங்களை நீங்களே கிள்ளிப்பார்க்க வேண்டும். அது இயல்பானது இல்லை.

நான் அங்கிருந்த முதல் நாளில் மூன்று பேருடன் உரையாடினேன் – காணாமல் போனவர்களைத் தேடி அலையும் தாய்மார் அமைப்பு, நில அபகரிப்புக்கு எதிராக குரல் கொடுத்த உள்ளூராட்சியின் ஒரு பிரதிநிதி மற்றும் அதே மாவட்டத்தின் மீனவர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர். அங்கு இராணுவமே பிரச்சினைகளுக்கு காரணம் என்று அவர்கள் அனைவருக்கும் குறைபட்டனர். அந்த மீனவர் கவனத்தை ஈர்க்கும் கதை ஒன்றைச் சொன்னார். பெருநிறுவன ட்ரோலர் படகுகள் போன்றவை இலங்கை கடற்பரப்பில் அனுமதிக்கப்பட்டதன் விளைவாக சராசரி தமிழ் மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரச் சவால்கள் குறித்து பேசினார். தமிழ்நாட்டு மீனவர்களின் அத்துமீறல்களே இதற்கு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இந்த ஒட்டுமொத்தச் சூழலில் என்னை மிகவும் உறுத்தியது துரோகத்தின் அளவு தான். ஆனால், உணர்ச்சிகளுக்காக இப்போது வார்த்தைகளை வீணாக்கமாட்டேன்.

காலை உள்ளூர் உணவுக் கடையான அம்மாச்சிக்கு சென்றோம். பெண்கள் வலுவூட்டலில் ஒரு வகையாக அது உள்ளது. ஏனென்றால் பெரும்பாலான சமையல் வேலையை செய்பவர்கள் பெண்கள் என்று எனது சகா ஒருவர் கூறினார். அதன் முக்கியத்துவத்தை நான் கவனிக்கத் தவறிவிட்டேன் என்று கருதுகிறேன் அதாவது அங்கு ஆண்கள் குறைவாக இருக்கின்றனர்.

இரண்டாவது நாள் ஒரு பெண்மணியைச் சந்தித்தேன். அவரது கணவர் மற்றும் மகன் காணாமல் போயுள்ளனர். அவர் தொடர்ந்து தனது குடும்ப உறுப்பினர்களை, அதிலும் குறிப்பாக தனது புதல்வனை இராணுவம் அழைத்துச் சென்றது பற்றி அவர் தொடர்ந்து கேள்வி எழுப்புகிறார். போர் முடிந்த நிலையில், தானே கொண்டுசென்று அவர்களை இராணுவத்திடம் கையளித்ததாக அவர் கூறுகிறார்.தான் அப்படிச் சொல்ல வேண்டும் என்று யாரும் வற்புறுத்தவில்லை என்று அவர் கூறினாலும், தனது மகனை அதற்கு பின்னர் அவர் பார்க்கவில்லை. அரசு பதிலேதும் அளிக்காத நிலையிலும் அதற்கு தாங்கள் காரணமல்ல என்று கூறிய நிலையிலும், பலவிதமான அதிகாரப் படிநிலைகளின் மத்தியில் அவர் தொடர்ச்சியாக தனது மகனைக் கண்டுபிடிக்க முயன்றார். ஆனால் மீண்டும் அந்த ஒரே பொய்யே கூறப்பட்டது.

அது அவருக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் ஒரு நகைச்சுவையாகவே மாறிவிட்டது. அதேவேளை இராணுவம் தமது அளப்பரிய புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து மக்களை நம்ப வைக்க பெரியளவில் நேரத்தை செலவிட்டது. அப்படியான எண்ணங்கள் கூறப்பட்டாலும், யதார்த்தத்தில் எம்மால் அப்படியான புனர்வாழ்வு நடவடிக்கைகள் எதையும் காண முடியவில்லை.

அன்றைய தினம், வடக்கே தமிழ் மக்களின் உரிமைகளுக்காகச் செயற்பட்டு வந்த ஒரு ஒரு புகைப்படக் கலைஞரின் இறுதிக் கிரியைகளில் என்னால் பங்குபற்ற முடிந்தது. அவரது இறுதிக் கிரியை அவரது குடும்ப வீட்டுக்கு தொலைவில் நடைபெற்றது. சேற்றுப்பாதை ஊடாக அங்குச் செல்ல வேண்டியிருந்தது. தொடர்ச்சியாக பல மணித்தியாலங்கள் மழை பெய்ததால் மக்கள் அந்த சேற்றின் ஊடாகவே நடந்து சென்று பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த வேண்டியிருந்தது.

எனது அஞ்சலியைச் செலுத்த உயிரிழந்தவரின் வீட்டுக்கும் சென்றேன். அங்கு இரங்கல்களை தெரிவிக்கும் வகையில் இருந்த சுவரொட்டிகளில், நாட்டின் முக்கியமான அரசியல்வாதிகளில் ஒருவரான விமல் வீரவன்ஸவின் பெயரும் இருந்தது. அப்படியான உணர்சிகள் மிகுந்த தருணத்தில் கூட எந்த அரசியல்வாதியும் அந்தச் சூழலில் ஆதாயம் தேடுவதற்கான வாய்ப்பைத் தவறவிடுவதில்லை. அதேவேளை வடக்கின் சுற்றுச்சூழல் பன்முகத்தன்மை என்னை மிகவும் ஈர்த்தது அதில் அமானுஷ்ய அழகிருந்தாலும் சில வேளைகளில் அச்சுறுத்துகிறது. வெறுமையாக இருந்த நீண்ட சாலைகளில் குறைவான மனிதர்களே இருந்தனர். அங்கு நாளாந்தம் சனநெருக்கடியின் அடர்த்தி குறைந்து வருகிறது. எனினும் விலங்கினங்கள் இங்கும் அங்கும் அலைகின்றன. அனைத்து வகையான பறவைகளும் சாலையில் மிக நெருக்கமாகக் கூடுகின்றன. மனிதர்களைக் கண்டு பறந்துவிடும் பறவைகள் மனிதர்களின் குடியிருப்புகளுக்கு இவ்வளவு நெருக்கமாக ஏன் வருகின்றன என்று நான் வியந்தேன். இதற்கான பதில் அங்கு சனநெருக்கடி குறைந்து வருவதே. முல்லைத்தீவு ஒரு பாழடைந்த நகர். அங்கு ஒரு மூலையில் போர் வலயமல்லாத ஒரு பகுதியாக ஒரு சைவக் கோவில். அங்கு இராணுவத்தினர் பிரார்த்தனை செய்ய வருவார்கள் என்று கூறப்பட்டது.





எனது மூன்றாவது மற்றும் பயணத்தின் இறுதி நாளன்று, ஒரு விவசாயி மற்றும் அவரது மனைவியைச் சந்தித்தேன். ஒரு காலத்தில் அவர்களுக்கு சொந்தமாக இருந்து இப்போது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிக்கு எதிரேயுள்ள ஒரு இடத்தில் வசிக்கின்றனர். ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன், அதாவது இந்தச் சட்டங்கள் எதுவும் மண்ணில் எழுதப்பட்டவை அல்ல. அவை பழக்கத்தின் மூலம் ,அச்சத்தின் காரணமாக வந்த வழக்கமாகிவிட்டது. இராணுவம் எப்படிச் செயற்பட வேண்டும் என்ற முறையை வரையறுக்கும் தனியான சட்டரீதியான கட்டமைப்பு ஏதுமில்லை. மாறாக, தீயநோக்கம் கொண்ட கெடுபிடிகள், ஆக்ரோஷமான அச்சுறுத்தல்கள் ஆகிய கலவைகளை உள்ளடக்கிய இராணுவத்தின் தேவைகள் என்பவற்றுக்கு ஏற்ற வகையில் தம்மைக் ஒடுக்கிக் கொண்டு வாழும் நிலையில் பொதுமக்கள் உள்ளனர். அவர்களின் நடவடிக்கைகள் மற்றும் அவர்களுடன் எப்படி ஒத்துழைக்க வேண்டும் என்பதற்கு சட்ட வரையறை ஏதுமில்லாததால், இராணுவத்தால் காத்திரமாக எதையும் செய்துவிட்டு அதிலிருந்து தப்பிக்க முடிகிறது. இராணுவத்தினர் தமது நிலங்களை அபகரித்து, அதன் வளங்களைப் பயன்படுத்தினாலும் அதற்கு இழப்பீடு அளிக்காமல் உள்ளனர் என்று கூறியதோடு மாத்திரமன்றி தெற்கிலிருந்து காட்டு யானைகளை வடக்குக்குள்

இவை உண்மைகள் மட்டுமே. இருள்சூழ ஆரம்பித்ததும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாகக் கட்டப்பட்டுள்ள தேவாலயம் ஒன்றைச் சென்று பார்த்தோம். அதில் உயிரிழந்தவர்களின் பெயர்கள் கரும்பலகையில் பொறிக்கப்பட்டிருந்தன. கடற்கரையோரம் முழுவதும் படகுகள் நிறைந்திருந்தன. வீதிகளில் இருந்த வெறுமை உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும். அங்கு பூனைகள் குறைவாக இருப்பது பற்றி நான் பகடியாகக் கூறினேன். இயல்பான கற்பனைக்கு எட்டாத வகையில் நாட்டின் இந்தப்பகுதியில் பிரச்சினைகள் இருப்பதாகத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்து விடுவதற்கு எடுத்த பெரும் முயற்சிகள் பற்றியும் அந்த மக்கள் கூறினர். இந்தக் காட்டு யானைகள் அந்த விவசாயி மற்றும் அவரது மனைவி போன்றவர்களின் வாழ்வாதாரங்களை அழித்து நேரடியாக சுற்றுச்சூழல் கட்டமைப்பை பாதிக்கின்றது என்பது பற்றிய குற்றச்சாட்டை முன்வைத்தனர். அடுத்த நாள் காலை உணவு தயாரிக்கும் போது முதல் நாள் இரவு மிஞ்சிய சோறில் துப்பாக்கித் தோட்டக்கள் இருந்ததைக் கண்டதாக அந்த விவசாயியும் அவரது மனைவியும் எம்மிடம் கூறினர். இது ஏதோ எதேச்சையாக நடைபெற்ற சம்பவமாக இல்லை. அச்சுறுத்தும் ஒரு காரணியாகவே உள்ளது. மேலும் தமிழ் மக்கள் எல்லைகளை மீறாமல் இருப்பதற்காக அச்சுறுத்தி வைக்கும் மிகவும் மேம்படுத்தப்பட்ட ஒரு உளவியல் நடவடிக்கையாகவே உள்ளது. அந்த உணவகத்துக்கு மூன்றாவது நாளன்றும் சென்ற போது, எம்மை குறைந்தது ஐந்து வித்தியாசமானவர்கள் அவதானித்தனர். இருவர் சீருடை அணியாத பொலிஸார் ,மற்றவர்கள் சமூகத்தில் நடைபெறுவதைக் கூறும் உளவாளிகள். பிரபலமான மத வழிபாட்டு இடமொன்றுக்கு சென்ற போது, தமிழ் மக்களின் உரித்துக்கள் குறித்து இராணுவம் எதுவும் கவலைப்படுவதில்லை என்பதை நான் அவதானித்தேன். அதேவேளை கடலுக்கு நேர் எதிராக உள்ள மற்று





உரிமைகள்
அரசியல்,
வணப்படத்


பெற்ற தீவிரமான் பிரசாரமும் இந்த போலித் தேசியவாத முழக்கத்தை முன்னெடுக்க வழிவகுக்கிறது.

ஆனால் உண்மையில் வடக்கில் வலிந்து சிங்கள மக்களை மறைமுகமாகக் குடியமர்த்தும் நோக்கத்தின் மூலம் குடித்தொகையின் சமநிலையைக் குழப்பி, 'வெளியேறுங்கள், ஒருவரை ஒருவர் முரண்படுங்கள் அல்லது செத்து மடியுங்கள்' என்கிற நில்லையே உருவாக்கப்பட்டுவருகின்றது.

புராண காரணங்கள் அல்லது வேறு எந்த நோக்கமாக இருந்தாலும் சரி அல்லது அரசு உண்மையாக வடக்கின் பொருளாதார நிலையை மீண்டும் புனரமைப்புச் விரும்புகிறதா என்பது இன்னும்தெரியவில்லை.இந்த நிலையில், 'வடக்கை இராணுவம் மட்டுமே ஆட்சி செய்கிறது ,தெற்கை மட்டுமே அரசு ஆட்சி செய்கிறது' என்பதைக் கூட அரசு ஒப்புக்கொள்வது இல்லை. இந்தத் தீவில் தெற்கும் வடக்கும் நிலத்தின் மூலம் மட்டுமே தொடர்பிலுள்ளன என்கிற காத்திரமான உண்மை நிலவும் போது, "ஒரே நாடு, ஒரே சட்டம்" என்ற மாயத்தோற்றத்தின் மூலம் அவை இணைக்கப்படுகின்றன என்ற வாதம் வைக்கப்படுகிறது.

**வடக்கின் சுற்றுச்சூழல் பன்முகத்தன்மை என்னை மிகவும் ஈர்த்தது அதில் அமானுஷ்ய அழகிருந்தா லும் சில வேளைகளில் அச்சுறுத்துகிறது. வெறுமையாக இருந்த நீண்ட சாலைகளில் குறைவான மனிதர்களே இருந்தனர். அங்கு நாளாந்தம் சனநெருக்கடியின் அடர்த்தி குறைந்து வருகிறது. எனினும் விலங்கினங்கள் இங்கும் அங்கும் அலைகின்றன.**

புவியியல் ரீதியாக அவை ஒரே நிலப்பரப்பில் இருந்தாலும், சட்டரீதியாக இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தெற்கே நீங்கள் மேற்கத்திய உல்லாச கலாசாரம், கேளிக்கைகள், சிறந்த ஹொட்டல்கள் ஆகியவற்றை அனுபவிக்கலாம். ஆனால் வடக்கிலோ "மனிதாபிமான நடவடிக்கை" என்று கூறப்பட்ட நடவடிக்கையில், இராணுவம் மட்டுமே வெற்றிபெற்ற நிலையில் போரின் வடுக்கள் மற்றும் போர்க்காலத்தில் நிகழ்ந்த கொடூரங்களின் காட்சிகளை மட்டுமே நகைமுரணாக பார்க்க இயலும். அவையே நல்லெண்ணத்தின் சமிக்ஞைகள் என்று எமக்கு நினைவூட்டப்படுகிறது.



இன்று வடக்கில் தமிழர்கள் எதிர்கொள்வது கலாசாரம் மற்றும் உடல்ரீதியாக முற்றானதும் திட்டமிட்ட இனப்படுகொலையாகும். போரின் இறுதியில் இனப்படுகொலை ஒன்று இடம்பெற்றது என்று நான் நம்பவில்லையென்றாலும், அந்த இனப்படுகொலை இப்போது நடைபெறுவதாக நம்புகிறேன். "இனப்படுகொலை நடைபெறவில்லை" என்ற வாதம் வடக்கை கொடூரமான வகையில் வலிந்து ஆக்கிரமிப்பதை நியாயப்படுத்துவதற்கு வழி செய்துள்ளது. அங்குள்ள ஒவ்வொரு தமிழரும் மரபணு ரீதியாக பயங்கரவாத சந்தேகநபர்கள், அவர்கள் விடுதலைப் புலிகளை மீண்டும் உயிர்ப்பிப்பார்கள் என்று இராணுவம் முத்திரை குத்தியுள்ளது. வடக்கில் முக்கியமான பிரச்சினைகள் இராணுவமயமாக்கலும், அதன் மூலம் வடக்கில் வாழும் தமிழர்கள் மீது முன்னெடுக்கப்படும் கலாசார மற்றும் உடல்ரீதியான இனப்படுகொலையுமே. அங்கு விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்வதற்கான எந்த ஆதாரத்தையும் என்னால் காண முடியவில்லை.

அவ்வளவு பெரிய இராணுவப் பிரசன்னம் இருக்கையில் அங்கிருக்கக் கூடிய தமிழர்கள் எப்படியாவது வாழ வேண்டும் என்று எண்ணுவார்களே தவிர தமக்கு பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்ப மாட்டார்கள் என்று நீங்கள் முன்கூட்டியே கணிக்கக் கூடும். ஆனால் இராணுவம் தொடர்ச்சியாக வடக்குப் பகுதியில் [illegible] பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளது என்று சித்தரிப்பதும், யுத்த காலத்தில் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொரு கோவிலில் அரச மரம் ஊன்றப்பட்டு பௌத்தக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை தெரிகிறது. அந்த கோவிலிற்கு பொறுப்பான பிக்கு அங்கு அமர்ந்துள்ளார். அந்த சைவக் கோவிலில் இருந்த தெய்வச்சிலைகள் அதன் பூசகரின் அனுமதியின்றி அங்கிருந்து எடுக்கப்பட்டுள்ளன. சைவக் கோவிலிருந்து கடவுளின் விக்கிரகம் ஒன்று அகற்றப்படும் போது செய்யப்படும் வழக்கமான மதச்சடங்குகளும் இடம்பெறவில்லை. இந்த இடத்தில் இப்போது சிங்கள பௌத்த சின்னங்கள் ஏதும் இல்லை. ஆயினும் முன்னர் அப்படியான பௌத்த வழிபாட்டிடம் இருந்ததாகக் கூறி சிங்கள பௌத்தர்கள் அங்கு வர முடிவு செய்தனர் என்ற கதை ஒன்றும் கூறப்படுகிறது.


நன்றி கூறி விடைபெறுவதில் நான் சிறந்தவன் இல்லையென்றாலும், புறப்படும் போது எனக்குள் மன வருத்தம் ஏற்பட்டது. எனினும் விரைவாக இப்படியான சந்திப்புகள் மீண்டும் இடம்பெறும் என்ற நம்பிக்கையும், அந்த நட்பு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சாட்சியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இன்று வடக்கைப் பார்த்துவிட்டு, அங்கிருந்து திரும்பிய பிறகு அதை இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன சூழலுடனேயே என்னால் ஒப்பிட முடிகிறது. சூழல்கள் தனித்துவமாக இருந்தாலும், இராணுவ வர்க்கம் மற்றும் குடிமக்கள் ஆகிய இருவருக்குமிடையிலான கலாசார பரிமாற்றத்தில் பொதிந்துள்ள கருத்துக்கள் மற்றும் எண்ணங்கள் வடக்கில் நிகழும் நிகழ்வுகளுடன் இஸ்ரேல்பலஸ்தீனச் சூழல் மிகவும் ஒத்துபோகின்றது. "இராணுவம்" மற்றும் "தமிழர்கள்" என்கிற வார்த்தைகளை "யூதப்பேரினவாத" மற்றும் "ஹமாஸ்" என்று மாற்றிப்பாருங்கள், ஒரு பிளவுபட்ட தேசத்தை அடைவதற்கான நிகழ்வுகளை வரிசைப்படுத்த முடியும். ஆனால் அது பரவாயில்லை;

'போருக்கு பிறகு நாம் இறுதியாக முழு அளவில் ஒன்றுபடுத்தப்பட்டுள்ளோம் .அதனால் தான் மில்லியன் கணக்கான ரூபாவைச் செலவுசெய்து சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறது ஏனென்றால் நாடு முழுவதும் இணைக்கப்பட்டு சுதந்திரமாக உள்ளது . அந்த உண்மையை ஏற்க வேண்டும்' என்று எமது அரசால் தொடர்ச்சியாக கூறப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறோம். அவ்வாறு அரசு சொல்வதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் பிரிவினைவாதி ஆகிவிடுவீர்கள் . நீங்கள் இப்போது ஒரு பிரிவினைவாதி என்று அழைக்கப்பட விரும்பமாட்டீர்கள் அல்லவா?



# சிறுவர் கைவண்ணம்



M. அட்சயா,
தரம் - 10
யா/ இந்து மகளிர் கல்லூரி



ல. அக்சயா,
தரம் - 2
கிளி/ தருமபுரம்
அ.த.க.பாடசாலை



சி.அபிநதிகா,
தரம் - 1A
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி




ஜெ. லயா,
தரம் - 2
யா/ உடுவில் மகளிர் கல்லூரி



த.பிதுசன்
தரம்- 5
யா/ஆனைக்கோட்டை,
றோ.க.த.க பாடசாலை



பா.லதுர்ஷன்
தரம் 6
யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரி



சு.மாதுளன்,
தரம் 1
யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்



றெ.வெறேஷோனா
தரம்- 9
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்



# மதிப்பின் பெறுமதி

ஆற்றங்கரை ஓரமாக வந்துகொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனுக்கு வைரக்கல் ஒன்று கண்ணில் பட்டது. அது வைரம் என்றறியாமல், விலை போகுமா என்ற சந்தேகத்துடன் கடைத்தெருவுக்கு எடுத்து வந்தான்.

அவன் கையில் வைரம் இருப்பதைப் பார்த்த வியாபாரி ஒருவன், இருபது ரூபாய்க்கு தன்னிடம் அதை விற்குமாறு கேட்டான்.

ஆனால் வழிப்போக்கனோ பேரம் பேசித்தான் பார்ப்போமே என்ற எண்ணத்துடன் 25 ரூபாய் கேட்டான்.

ஐந்து ரூபாய் அதிகம் கொடுக்க விரும்பாத அந்த வியாபாரியும் 20 ரூபாய்க்கு பேரம் பேசினான்.

இதைக் கவனித்த மற்றொரு வியாபாரி 25 ரூபாய் கொடுத்து அந்த வைரத்தை வாங்கிக்கொண்டு சென்றான். ஆத்திரமடைந்த வியாபாரி, அந்த வழிப்போக்கனை பார்த்து,

"அட முட்டாளே! அதன் மதிப்பு பல ஆயிரம் பெறும். அறிவில்லாமல் விற்றுவிட்டாயே!" என்று திட்டினான்..

அதற்கு அவன், "அந்தக் கல்லுக்கு என்னுடைய மதிப்பு அவ்வளவுதான். ஆனால் அது வைரம், அதன் மதிப்பு தெரிந்தும் அதைத் தவறவிட்ட நீ தான் மிகப்பெரிய முட்டாள்" என்றான். சிலர் இப்படித்தான் உண்மையான மதிப்பு தெரிந்தும், கிடைத்ததை விட்டு விட்டுத் தவிக்கிறார்கள்.

# தட்டு நிறைய லட்டு



வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதி விட்டு

எடுத்தான் மீதம் கிட்டு
மீதம் உள்ள லட்டு
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு

கிட்டு நான்கு லட்டு
பட்டு நான்கு லட்டு
மொத்தம் தீர்ந்த தெட்டு
மீதம் காலித் தட்டு!

# வாழ்க்கை உங்கள் கையில்...




இளம் பெண்ணாக வாழ்க்கையில் நீங்கள் எதைச் செய்தாலும் இந்தச் சமூகம் உங்களை ஒரு அழுத்தத்துக்கே உட்படுத்தும். உங்களிடம் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். உன்னால் இதையெல்லாம் செய்யமுடியாது என்று மட்டும் யாரையும் சொல்ல அனுமதித்து விடாதீர்கள். நீங்கள் எதைச் செய்யவேண்டும் எதைச் செய்யக்கூடாது என்பதை வேறொருவரை தீர்மானிக்க விடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்கோணல் கடவுள்

○ இராகவன்



10

எதற்காக அவசியமே இல்லாமல் முட்டாள் தனமாக சிரித்துத் தொலைத்தாய்? அமர்ந்திருப்பவனுக்குக் கேட்டிருக்குமென நினைக்கிறேன். உடனே குனிந்து பார்த்தான் அல்லவா? இனிமேல் சிரித்துத் தொலைக்காதே? "

"வடிகட்டிய முட்டாளே நீ ஏன் வீணாக குழப்பம் அடைகிறாய்? நான் சிரிப்பது சாதரணமான மனிதர்களுக்குக் கேட்கவே கேட்காது. நாய்களுக்கு மட்டுமே கேட்கும். இந்த மனிதன் நான் சிரித்ததைக் கேட்டு குனிந்து பார்க்கவில்லை. அவன் தற்செயலாகத் தான் அதைச் செய்தான். இதில் சந்தேகப்பட்டு நீ குழப்பம் அடைய வேண்டியதில்லை. என்றாலும் நாங்கள் முன்னெச்சரிக்கையோடு இருக்கவேண்டும். "

" ம்.....அதுவும் மெய் தான். எதற்காக சிரித்தாய் ? என்பதை மட்டும் சொல்."

" ஓ! அதுவா? ஒன்றும் இல்லை. இந்த ஆண் இருக்கிறானே அது தான் நம்மீது உட்கார்ந்து கொண்டிருப்பவன் அவனுக்கென்ன வந்துவிட்டது? அவனுக்கு எதுவும் இல்லை. அவனது மனநிலையை எண்ணித் தான் சிரிக்கத் தோன்றியது. வான தூதனாக கருதப்பட்ட இடத்திலிருந்து வெளியேறி விட வேண்டுமென துடியாய் துடித்துக் கொண்டிருந்தான் அங்கிருந்து வெளியேறி இங்கே வந்ததும், இங்கிருந்து வெளியேறி விட துடியாய்த் துடிக்கிறான். இங்கிருந்து வெளியேறி வேறிடத்துக்குப் போனாலும் இதே மனநிலையில் தான் இருப்பான். இவனை மாற்றவே முடியாது. இது தான் சிரிக்க வேண்டி இருந்தது. மனிதர்கள் எல்லோருமே இதே மன நிலை கொண்டவர்கள் தான் அதற்கு இவன் மட்டும் விதி விலக்காகி விட முடியுமா?"

" ம்... அதுவும் சரி தான். எங்கள் நால்வரிலும் நீ தானே முக்காலமும் உணர்ந்தவன். அதனால் தான் கேட்கிறேன். சற்று முன் இவனுடன் பேசியவள் இங்கிருக்கும் இருக்கைகள் நிரம்பினால் தான் இங்கிருந்து இருவரும் வெளியேறி விட முடியும் எனச் சொன்னாள். .இது சாத்தியமா?"

" ஏன் சாத்தியமில்லை? இந்த மனிதர்கள் எப்போதும் கனவுகளுடன் தான் கண் விழிக்கிறார்கள். கனவுகளைச் சுமந்து திரிகிறார்கள். கனவுகளோடு தான் உறங்குகிறார்கள். இன்னும் இதைப்பற்றிய தகவல் பரவவில்லை. பரவத் தொடங்கியதும் இங்குள்ள இருக்கைகள் நிரம்பி வழியத் தொடங்கி விடும். பலரும் இருக்கை கிடைக்காமல் வெளியே முண்டியடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கத் தானே போகிறாய்"

"அது எப்போது நிகழும்?"

" நமக்கு மேலே உட்கார்ந்திருப்பவன் எப்போது படுத்துறங்குகிறானோ அப்போது தான் இவ்விருக்கைகளைப் பற்றிய தகவல் நகரத்துக்குள் முழுமையாகப்பரவும். அநேகமாக நாளை விடியும் போது, நான் சொன்னது நிகழ்ந்து விடும்."

"அப்படிப் போகிறதா சங்கதி? நான் ஏதோ இப்போதே அந்த அதிசயம் நிகழ்ந்து விடுமென எதிர்பார்த்தேன். எல்லாவற்றுக்கும் கால, நேர ஒழுங்குகள் இருக்கின்றன. அது எப்போது நிகழ வேண்டுமோ அப்போது தான் நிகழும். அதுவரை நாங்களும் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளலாம். நாங்கள் ஓய்வெடுத்துக் கொண்டால் தான் நமக்கு மேலேயிருப்பவனும் ஓய்வெடுத்துக் கொள்வான் என்பது விதியாகும்"

" ஓகோ! அப்படியுமொன்று இருக்கிறதா? சரி சரி, நடக்கட்டும் , நடக்கட்டும்"

பதுமைகள் பேசி முடித்து ஓய்வெடுத்துக் கொண்ட பின்னர் அவள் வந்து "ஏதாவது அருந்தக் கொண்டு வரவா? "எனக் கேட்டாள். "ஒரு செம்பு இலவங்கப்பட்டை ரசம் கிடைக்குமா?" எனக் கேட்டேன். எதுவும் சொல்லாமல் போய் ஒரு செம்புடன் திரும்பி வந்தாள். செம்பு நிரம்ப மண்ணிறத் திரவமிருந்தது. வாங்கிப் பருகினேன். இனிப்பும் காரமும் ஒன்றையொன்று மேவிய நிலையிலிருந்தன. பருகப்பருகக் குளிர்ந்து கொண்டேயிருந்தது. இலவங்கப்பட்டையின் நறுமணம் என்னை மிதக்க வைத்தது. செம்பை அவளிடம் நீட்டினேன்.

"வேறு ஏதாவது வேண்டுமா? " எனக் கேட்டாள். வாய் திறந்து பதிலளிக்க முடியாமல் குளிர்ந்தது. எதுவும் வேண்டாமெனக் கைகாட்டினேன். அவள் திரும்பிச் சென்று விட்டாள். ஒரு வித மயக்க நிலைக்குள்ளானேன். வெள்ளைத் துகிலணிந்த நடனமாதர் சிலர் வந்து வரிசை கட்டி நின்று நர்த்தனமாடினர். சதங்கைகள் பாடக் கேட்டேன். அதுவோர் இனிய தாலாட்டுப் போன்றிருந்தது. இருக்கையில் சரிந்து கொண்டே அந்நிகழ்வை பார்க்கலானேன். அந்நிலையிலேயே உறங்கிப் போனேன்.

கண்விழித்த போது மறுநாள் தொடங்கியிருந்தது. காட்சியறையெங்கும் ஒரே பரபரப்பாயிருந்தது. ஆள்கள் குழுமி நின்று கலகலத்துக் கொண்டிருந்தனர். நேற்றுப் பிற்பகல் பதுமைகள் பேசிக் கொண்டதை நினைவு கூர்ந்து சிரித்தேன்.

"என்ன சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள் ? எழுந்து ஆள்களை வரிசைப்படுத்தும். இங்கிருந்து வெளியேறிச் செல்ல விரும்பவில்லையா?" அவள் தான் எனக்குப் பின்னால் நின்று கொண்டு சற்று உரத்த குரலில் சொல்லலானாள். நான் எழுந்து, "தயவு செய்து கனவு காண வந்தவர்கள் வரிசையாக நில்லுங்கள்" எனக் கத்தினேன். சலசலப்பெல்லாம் இம்மென்றடங்கியது.

"கறுப்பு வெள்ளைக் கனவுகளை விரும்புவோர் ஒரு புறமும், வண்ணக் கனவுகளைக் காண விரும்புவோர் மறுபுறமுமாக வரிசை கட்டி நில்லுங்கள்"அவள் தன் பங்குக்குக் கத்தினாள்.

கறுப்பு வெள்ளைக் கனவுகளை விரும்புவோர் வரிசையில் மூன்று பேர் மட்டும் வந்து நிற்க, ஐம்பதுக்கும் மேற்பட்டோர் வண்ணக் கனவுகளை விரும்புவோர் வரிசையில் நின்று கொண்டிருந்தனர். அந்த வரிசை முடிவின்றி நீளப் போவதாகத் தோன்றியது.

"கறுப்பு வெள்ளைக் கனவு காண்பவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருப்பது பத்து இருக்கைகளாகும். மூன்றே மூன்று பேர் தான் இதற்காக முன்வந்துள்ளனர். வண்ணக் கனவுகளுக்காக எண்ணற்றோர் முன்வந்தி ருப்பினும் ஏழு இருக்கைகள் வெற்றிடமாகவேயிருக்கப் போகும் நிலையில், இங்கிருந்து நீயோ நானோ வெளியேறிச் செல்வதென்பது சாத்தியமேயற்றதெனத் தோன்றுகிறது " என்று அவள் எனக்குப் பின்னால் நின்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

"சற்றுநேரம் பொறுத்திருந்து பார்க்கலாம். ஏழு பேர் முன்வராத நிலையில் வண்ணக் கனவுகளுக்காக வந்திருப்பவர்களைக் கொண்டு அந்த வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ளலாம். இங்கே வந்திருப்பவர்களுக்கு இந்த ஆசன ஒதுக்கீட்டு விபரம் தெரியாதல்லவா? "என்றேன்.

"நீ சொல்வதைக் கேட்கக் காதுக்கினிமையாகத் தானிருக்கிறது. ஆனால் இதில் இரு விடயங்கள் தடையாக இருக்கப் போகிறதென்பதை மறந்து விட்டாய்? முதலாவது ஒழுங்கு விதிகளை மாற்றியமைக்கும் அதிகாரம் எமக்கில்லை. மற்றது கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்கான இருக்கைகள் வண்ணக் கனவுகளுக்காக முன்வந்திருப்பவர்களைத் தம்முள்ளே அனுமதிக்கப் போவதில்லை. இவ்விரு தடைகளுமிருக்கும் வரை நாமிங்கே தான் முடங்கியிருக்க வேண்டியிருக்கும். அதில் எந்தவொரு மாற்றமும் நிகழச் சாத்தியமில்லையென்பதை நினைவில் கொள்" என்றாள் சற்றே ஏளனமாக.

"எது நிகழ வேண்டுமென்றிருக்கிறதோ அது நிகழ்ந்தேயாகும். இதற்காகவெல்லாம் மனக்குழப்பமடைய வேண்டியதில்லை. நாங்கள் இங்கிருந்து வெளியேற வேண்டுமென்றிருந்தால் அதற்கு தடை விதிக்க யாரால் முடியும்?" பதுமைகளின் உரையாடலைக் கேட்டிருந்த துணிவில் அவளிடம் இவ்விதங் கூறலானேன். நான் சொன்னதைக் கேட்டுச் சிரித்து விட்டு, "இதென்ன வானதூதரின் வாக்குத் தத்தங்கள் போன்றிருக்கிறது? நீ பேசாமல் அங்கேயே வான தூதனாகப் பாவனை செய்து கொண்டிருந்திருக்கலாம்.

எனக்கும் தைலமிடும் வேலையாவது நிரந்தரமாக இருந்திருக்கும்" என்று சொல்லிப் பெருமூச்செறிந்திந்தாள். பதுமைகளின் உரையாடல் குறித்து அவளுக்குச் சொல்லத் தோன்றியது. எனினும் சொல்லவில்லை. இங்கிருந்து வெளியேறிப் பொருத்தமானதொரு களத்தை அடைந்ததும் சொல்லிக் கொள்ளலாம் எனவெண்ணிப் பேசாமலிருந்தேன்.

(தொடரும்)



## இறால் கட்லட்

| | |
|---|---|
| பெரிய இறால் - | 500 கிராம் |
| முட்டை - | 2 |
| உருளைக்கிழங்கு - | 250 கிராம் |
| பெரிய வெங்காயம் - | 1 |
| மிளகாய்த்தூள் - | 1 தேக்கரண்டி |
| ரஸ்க்தூள் - | தேவையானஅளவு |
| இஞ்சி | 2 அங்குலம் |
| பூண்டு - | 6 பல் |
| வினிகர்- | 1 மேசைக்கரண்டி |
| உப்பு - | தேவையானஅளவு |
| எண்ணெய் - | 500 மில்லிலீற்றர் |

இறாலை மிகவும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். முட்டையுடன் உப்புத்தூள் சேர்த்து அடித்து வைத்துக் கொள்ளவும்.

உருளைக்கிழங்கை வேக வைத்து, தோல் நீக்கியபின் உப்புத் தூள் சேர்த்து மசித்துக் கொள்ளவும். வெங்காயத்தை நறுக்கிக் கொள்ளவும். வாணலியில் 1 மேசைக்கரண்டி எண்ணெய் ஊற்றி, காய்ந்ததும் அரைத்த இஞ்சி, பூண்டு ஆகியவற்றைப் போட்டு வதக்கி ஆறவிடவும்.

நறுக்கிய இறாலுடன், மசித்து வைத்துள்ள உருளைக்கிழங்கு, வெங்காயம், இஞ்சி, பூண்டு வதக்கியது, மிளகாய்த்தூள், வினிகர் இவற்றை கலந்துகொள்ளவும். உப்பு சேர்த்துக் கொள்ளுங்கள். இறால் கலவையை கட்லட் வடிவங்களாக செய்து வைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கட்லெட்டை முட்டையில் நனைத்து, ரஸ்க்தூளில் புரட்டியபின் எண்ணெய்யில் போட்டு பொரித்து எடுத்து பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்திஸ்தான் ....

(02 ஆம் பக்கம் தொடர்ச்சி)

அதாவது அமெரிக்க - இந்திய அரசுகளின் கைப்பிள்ளைகளாகத் தம்மை மாற்றி, 1986 ஆம் ஆண்டுக்கு முன்னரான இந்தியப் பெருத்தேசியத்திற்குள் ஈழத்தமிழர்களைக் கரைத்துவிட வேண்டுமென்ற புதுடில்லியின் சிந்தனைக்குள் மீண்டும் அமுங்கிவிட்டனர் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

கண்முன்னே நடைபெற்றுக் கொண்டிருக்கும் பலஸ்தீனப் போராட்டம் சரியான திசையில் சென்று வெற்றி பெறுமானால், அது தமிழர்களுக்கும் சாதகமாகவே அமையும் என்ற அரசியல் புத்தியைக்கூட தமிழ்த்தேசியக் கட்சிகள் வகுக்கவேயில்லை.

போராட்டச் சூழ்நிலை - இடங்கள் - போக்குகள் எனப் பல்வேறு தனிப்பட்ட வேறுபாடுகள் உண்டு. இடத்துக்கு இடம் இருக்கும் தனித்துவமான காரணிகளை உள்வாங்கத்தான் வேண்டும். உதாரணமாக ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கையும், பலஸ்தீன தனிநாட்டுக் கோரிக்கையும் வேறுபாடுகள் கொண்டவை.

பலஸ்தீனர்கள் பிரிந்துபோகும் உரிமையைக் கோரவில்லை. மாறாகத் தமது நாட்டை இஸ்ரேல் அபகரிப்பதற்கு எதிராகவே போராடுகிறார்கள். பலஸ்தீனர்களும் யூதர்களும் தத்தமது தேசிய அபிலாஷைகளைப் பங்கிட்டுக் கொள்வதில் சிக்கலான கேள்விகள் இன்று வரை அங்கு தொக்கி நிற்கின்றன. ஆனால் பொதுத் தன்மைகளும் அங்கு ஏராளம். 2020 இல் கொரோனாப் பெருந்தொற்று நோய்த் தாக்கம் ஏற்பட்டபோது, இஸ்ரேல் அரசுடனும் இஸ்ரேலுக்கு ஆதரவான நாடுகளுடனும் பலஸ்தீனத்தை ஆளும் கமாஸ் அமைப்பு ஒத்துழைத்திருந்தது.

ஆனால் கமாஸ் இயக்க ஆட்சியை ஐக்கிய நாடுகள் சபை இதுவரை அங்கீகரிக்கவில்லை. வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்திப் பலஸ்தீன தனிநாட்டுக் கோரிக்கை நிராகரிக்கப்படும் என்ற அரசியல் அறத்துக்கு மாறான =அநீதியான செய்திதான் - கமாஸ் இயக்கத்துக்குத் தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டு வருகின்றது. இருந்தாலும் கமாஸ் தமது கோரிக்கையில் இருந்து ஒரு துளியேனும் விட்டுக் கொடுக்கவில்லை. சர்வதேச விதிகள் பலவற்றுக்கு ஏற்பத் தமது ஜனநாயக விழுமியங்களைக் கமாஸ் செயற்படுத்தி வருகின்றது. ஆனால் கமாஸ் இராணுவம் இன்னமும் பயங்கரவாத அமைப்பாக வல்லரசுகளி




னால் பார்க்கப்படுகின்றது. ஆகவே பலஸ்தீனர்களின் எதிரி இஸ்ரேலிய அரசு மட்டுமல்ல, பலஸ்தீனர்களுக்கு எதிரான இஸ்ரேல் அரசின் கோட்பாட்டுக்கு ஆதரவு கொடுக்கும் அத்தனை நாடுகளும் பலஸ்தீனத்துக்கு எதிரிதான். இந்தப் புரிதலோடுதான் சர்வதேசத்தினால் தாம் அங்கீகரிக்கப்படாத ஒரு பின்னணியில் வல்லரசுகளுக்கு இசைவான ஜனநாயக விழுமியங்களையும் அரசியல் உத்திகளையும் கமாஸ் இயக்கம் நெறிப்படுத்தி தம்மை மேலும் செம்மைப்படுத்தி வருகின்றது.

இந்தத் தெளிவு தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும் அவசியம். இலங்கை ஒற்றையாட்சி அரசு மாத்திரமே எதிரி என்ற குறுகிய பார்வையைத் தவிர்த்து, இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அத்தனை நாடுகளும் எதிரிதான் என்ற அரசியல் நோக்கு அவசியமானது. பலஸ்தீனம் தனக்கு எதிரியாகவுள்ள இஸ்ரேல் அரசுடனும் அதற்கு ஆதரவு வழங்கும் சர்வதேச நாடுகளுடனும் எந்தப் புள்ளியில் ஒன்றிணைந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது என்ற உத்திகளைத் தமிழ்த்தேசியக் கட்சிகள் படித்து அதற்குரிய பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

மாறாக இலங்கையை மாத்திரம் எதிரியாகக் கருதி கண்ணைமூடிக் கொண்டு அமெரிக்க - இந்திய அரசுகள் சொல்வதற்குத் தலையசைப்பது தமிழ்த்தேசிய மீட்சிக்கான அரசியல் அல்ல. இராமாயணக் கதையின் முடிவில், சகோதரப் படுகொலைகள் அதற்காக நடந்த வஞ்சகங்கள் சூழ்ச்சிகள் எல்லாவற்றையும் மறந்து ஒருமித்த குரலில் எவ்வாறு தேசத்தைக் காக்க வேண்டுமெனக் கம்பன் கூறும் உவமானம், தமிழ்த் தேசிய நாகரிகத்துக்கு மிகப் பொருத்தமானது. அதாவது தீமைகள் தோன்றுதலைத் தவிர்க்க முடியாது. அவை படைப்பின் செயற்பாடு. ஆனாலும் தீமைகள் நிலைத்துநின்று வெற்றி பெறுவதில்லை என்பதை வசிட்டரே இராமனுக்கு முடி சூட்டினார் என்ற பாடல் மூலம் கம்பன் ஜனநாயகத்தின் ஊடான சகிப்புத் தன்மை, ஒற்றுமை ஆகியவற்றை உலகத்துக்குப் போதிக்கிறான்.

**அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்த**
**பரதன்வெண் குடைக விக்க இருவரும் கவரி பற்ற**
**விரை செறி கமலத் தாள்சேர் வெண்ணெய்யூர்ச் சடையன் தங்கள்**
**மரபுளோர் கொடுக்க வாங்கி, வசிட்டனே புனைந்தான் மௌலி!**

இது கம்பன் படைத்த இராமாயணக் கதையின் இறுதிப் பாடல். "ஒருமித்த குரல்" என்ற அரசியல் அறம்தான். தேசத்தை மீட்கும் என்ற வள்ளுவன் வாக்கை கம்பன் அறியாதவன் அல்ல.

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்

**1917 ஜுலை 9**
சட்டசபை தமிழ் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட அருணாசலம் சபாபதிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

**1917 ஜுலை 21**
வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் சேர்.பொன் அருணாசலம் தலைமையில் செந்தமிழ் பரிபாலனசபை உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்த தமிழ் அறிஞர் அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் புத்துயிரளிப்பதே இந்த சபையின் நோக்கம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**1917 ஓகஸ்ட் 3**
பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றிய முதலாவது தமிழரான பரமநாதன் காலமானார்.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி பழைய மாணவரான இவர் பொறியியல் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக லண்டன் சென்றிருந்த வேளையில் அங்கு இராணுவத்தில் இணைந்து கொண்டார். 1915 ஆம் ஆண்டு முதலாம் உலகப்போர் ஆரம்பமானபோது தனது சிப்பாய்களுடன் எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு அனுப்பப்பட்டார். யுத்த களத்தில் மிகவும் சிறப்பான முறையில் போரிட்ட இவர் யுத்தம் முடியும் வரை கெய்ரோவிலேயே கடமைபுரிந்தார். 1917 ஓகஸ்ட் மூன்றாம் திகதியன்று கொழும்பில் காலமானார்.

* யாழ்.நகரில் வசித்து வந்த பெண் ஒருவர் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளைப் பிரசவித்தார். நான்கு குழந்தைகளும் ஆரோக்கியமாகக் காணப்பட்டனர்.

**1917 ஓகஸ்ட் 20**
ஒரு ரூபா நாணயத்தாள் வெளியிடப்பட்டது.

செப்ரெம்பர் 1 அரசாங்க அதிபர் துவைனம் தனது சேகரிப்புக்களை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தார்.

**1917 நவம்பர் 30**
லான்ஸ் கோப்ரல் ஐயாத்துரை காலமானார். யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி பழைய மாணவரான இவர் பிரிட்டிஷ் இராணுவத்தில் இணைந்து பணியாற்றிக்கொண்டிருந்த சமயத்தில் யுத்த களத்தில் உயிரிழந்தார். இவர் இராணுவத்தில் பணியாற்றிய காலத்தில் யுத்த களத்தில் மிகவும் ஓர்மத்துடன் யுத்தத்தில் ஈடுபட்டதாக இவரது மேலதிகாரிகள் பாராட்டியுள்ளனர்.

**1917 டிசெம்பர்**
கரைச்சி நீர் விநியோகத்திட்டம் சம்பந்தமான அறிக்கை சட்டத்தரணி தளையசிங்கத்தால் காணி ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

**1918 ஜனவரி 4**
கதிரவேலுச் சிறாப்பர் காலமானார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த இவர் ஒரியண்டல் வங்கியில் காசாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னர் கீரிமலையில் வசித்து வந்த காலத்தில் மடம் ஒன்றைக் கட்டுவித்தார். சிறாப்பர்மடம் என அழைக்கப்படும் இந்த மடம் இலங்கையிலுள்ள மடங்களிலேயே பெரிய மடமாக விளங்கியது.

இலங்கையின் நாற்புறத்திலிருந்தும் வரும் யாத்திரிகர்கள், உல்லாசப் பயணிகள், வழிப்போக்கர்கள் இந்த மடத்தில் தங்கி இளைப்பாறிச்சென்றுள்ளனர். மடத்தின் பராமரிப்புக்கென பெருந்தொகைப்பணத்தை வங்கியில் வைப்புச் செய்த சிறப்பர் கால்நடைகளுக்கான நீர்த்தொட்டி, ஆவுரோஞ்சிக்கல் என்பவற்றையும் அமைத்துள்ளார். அத்துடன் வழிப்போக்கர்களின் தாகம் தீர்க்கும் முகமாக இலவச மோர் வழங்கலையும் தினமும் ஏற்பாடு செய்திருந்தார். புராணபடனங்கள், அன்னதானம் போன்றவற்றுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்.
கீரிமலையில் நகுலேஸ்வரப்பெருமானின் திருப்பணிக்கும் கதிரவேலுச் சிறாப்பர் பெரும் பங்காற்றியுள்ளார்.
மடத்தில் பணிபுரிந்த முகாமையாளர், பூசகர், மோர் கரைத்து வைப்பவர், துப்புரவுத் தொழிலாளி போன்றவர்களுக்கு சம்பளமும் ஓய்வு பெற்றபின்னர் ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வந்தது. சிறாப்பர் வங்கியில் வைப்புச்செய்த பணத்தின் வட்டியின் மூலமே இவ்வளவு கைங்கரியங்களும் நடைபெற்றன.
அன்னாரின் சேவையால் மகிழ்ந்த சிவகணங்கள் 1918ஆம் ஆண்டு ஜனவரி நான்காம் திகதி பூந்தேரில் வந்து அழைத்துச் சென்றனர் என்றொரு கதையுண்டு.

அவர் தினமும் மதியபோசனம் முடிந்ததும் கிராமத்தவர்களை அழைத்து சீட்டாடுவது வழமை. வழமைபோல் 1918 ஆம் ஆண்டு ஜனவரி நான்காம் திகதியும் சீட்டாடிக் கொண்டிருந்தபோது " அதோ பாருங்கள் பூந்தேர் வந்து நிற்கிறது. என்னை அழைக்கிறார்கள். நான் போகப் போகிறேன்" எனக் கூறினார். சீட்டாடிக்கொண்டிருந்தவர்கள் அண்ணாந்து வானத்தைப் பார்த்தனர். அவர்களது கண்களுக்கு (ஊனக்கண்களுக்கு)எதுவுமே தெரியவில்லை. சிறாப்பர் நிலத்தில் சரிந்தார். (இந்தக் கதை கீரிமலையில் வாழ்ந்த முதியவர்கள் கூறியது) 1990 வலிகாம இடப்பெயர்வு வரை சிறப்பான முறையில் இயங்கி வந்த மடம் இடப்பெயர்வின் பின்னர் பலத்த சேதமடைந்திருந்தது.
தமிழர் கலாசாரத்தின் அடையாளச் சின்னமான மடத்தை தொல்பொருள் திணைக்கள வடமாகாண நிறைவேற்று அதிகாரி கபிலனும் சிறாப்பரின் பூட்டியான கௌரியும் இணைந்து சிறப்பானமுறையில் பாரமரித்து வருகின்றனர்.

(வரலாறு நீளும்)

# மாறுவதெங்கனம்...

விலைவாசிகளோ உயரத்தில்
வருமானமோ கீழ் மட்டத்தில்
ஆட்சியாளர்களோ சுகபோகமாய்
கதகதப்பான அறைகளிலும்
குளுகுளு வாகனங்களிலும்
உல்லாசம் மிகு வாழ்க்கை
நாட்டு மக்களுக்கு வாழ்க்கை
வெறுத்துப்போன விரக்தி நிலை

இதற்குள் சுதந்திர தினமென்று
பலகோடிகளைக் கெட்டி
கொண்டாட்ட நிகழ்வுகள்
பாலுக்கு அழும் பாலகர் குரலும்
அரைவயிறு கால்வயிறுமாய்
அல்லல்படும் துயரமும்
ஆளும் வர்க்கத்துக்கு எப்படிப் புரியும்
வரியென்ற பெயரில்

நாட்டு மக்களின் குருதியை
உறிஞ்சி வாழும் ஆள்வோருக்கு
பதவி பற்றியதே சிந்தனை

தேர்தல் திருவிழாவின்போது மாத்திரம்
குடிமக்கள் மீது
பாசம் பன்மடங்காகிவிடும்
பிரஜைகளும் அந்த பாசத்தில்

கட்டுண்டு போவர்
பிறகென்ன புள்ளடியிட்டு
வெற்றிக்கு வழி ஏற்படுத்துவர்
வென்றவரின் மக்கள் பாசம்
பதவி பற்றியவுடன் காணாமலாக்கப்படும்
பாவம் ஏழைகளின் துயரங்கள்
மாற்றமின்றி தொடரும்

**கோவையூர் உழவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org